கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை


விடுதலை தரும் சிலுவை 03


மாற்றத்தை நோக்கிய மறைக்கல்வி 05


குறுக்கெழுத்து போட்டி 13




# ஞான ஒளி

ஞான ஒளி
GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05


இதோ! திருச்சிலுவை இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்

15.09.2013 - (15 புரட்டாதி, 2013 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 71 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : GO / GD / 53 / NEWS / 2013

# “மீண்டும் ஒரு போதும் போர் வேண்டாம்”

## அரசுகளை ஆள்பவர்கள் உட்பட, சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் "ஆம் நாங்கள் விரும்புகின்றோம்" என சொல்லவேண்டும் என விழைகின்றேன்.

கடந்த 07ஆம் திகதி சனிக்கிழமை பேதுரு வளாகம் மக்கள் வெள்ளத்தால் காட்சியளித்தது. சிரியாவிலும், மத்திய கிழக்கிலும், உலகெங்கிலும் அமைதி நிலவ வேண்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் செபவழிபாடு இரவு 7.00 மணியில் இருந்து 11.00 மணி வரை நடத்தப்பட்டது. இவ்வழிபாட்டில் இஸ்லாம் மதப் பிரதிநிதிகள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் தமது செய்தியினை வழங்கினார்.அவர் தொடக்க நூல் 1:12, 18, 21, 25 வசனங்களை மேற்கோள் காட்டி “கடவுள் அது நல்லது எனக் கண்டார்” தமது படைப்பைப் பார்த்து அதைத் தியானிக்கும் உணர்வில் அது நல்லது என்று கூறியதை உலகு மற்றும் மனித சமுதாயத்தின் வரலாற்று பற்றிக் கூறும் விவிலியப் பகுதி நமக்கு கூறுகின்றது. இது நம்மைக் கடவுளின் இதயத்தில் நுழைய வைக்கின்றது. நாம் கடவுளின் செய்தியை அவரிடம் இருந்தே பெறுகின்றோம். இச்செய்தி நமக்கு சொல்வது என்ன?

கடவுளின் மனதிலும் இதயத்திலும் நமது உலகம் நல்லிணக்கம் மற்றும் அமைதியின் இல்லம் என்பதை இச்செய்தி நமக்கு சொல்லுகின்றது. நமது உலகம் “நல்லது”. இவ்வுலகம் நம் ஒவ்வொருவருக்கும் வீடு போன்றது. படைப்பனைத்தும் முரண்பாடில்லாத மற்றும் நல்ல ஒற்றுமையை அமைக்கிறது...

தொடர்ச்சி 15ம் பக்கம்


திருத்தந்தை பிரான்சிஸ்

# விசுவாசத்தில் உறுதிபெற்று இயேசுவை அறிவிப்போம்

## இறைவனின் அழைப்பு



அருட்தந்தை ரெஜினோல்ட் சபரமாது
திருப்பாலர் சபை தேசிய இயக்குனர்

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்” (மத் 28:9)

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்...! (மாற் 16:5)

“பாவமன்னிப்பு பெற மனம் மாறுங்கள் என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும். என்னும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்” (லூக் 24:47 – 48)

“தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்...” (யோவான் 20:21)

கிறிஸ்துவை உலகம் பூராகவும் பரப்ப நான்கு நற்செய்தி யாளர்களும் இயேசுவைப்பற்றிய புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இயேசு சீடர்களை அழைக்கிறார். தமது வார்த்தையை வாழ்வாக்க “என் பின்னே வாருங்கள்” என்று சொல்லி அப்போஸ்தலர்களை அழைத்தாலும், அவர்களின் பலவீனங்களை நற்செய்தியில் நாம் காணக்கூடியதாக உள்ளது. புனித பேதுரு இயேசுவின் பாதையை குறிக்கிட்டது மற்றம் அவர் இயேசுவை தெரியாது என மூன்று முறை மறுதலித்தது, யோவான் மற்றும் யாக்கோபு இறையரசில் முதலாம், இரண்டாம் இடத்தை எதிர்பார்த்தது, அப்போஸ்தலரான தோமா இயேசுவை பார்த்த பின் தான் நம்புவேன் என்று கூறியது. யூதாஸ் ஸ்கரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுத்தது. இப்படியான பல பலவீனங்களை நற்செய்தியில் நாம் காணலாம். இயேசு தாம் அழைத்த அப்போஸ்தலர்களின் பலவீனங்களை ஏற்கனவே அறிந்ததினாலேயோ, அவர் இவ்வாறு கூறினார். “இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன்...

தொடர்ச்சி 14ம் பக்கம்

# முழு உலகும் மரியாவின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணம்

வருகிற ஐப்பசி மாதம் முழு உலகையும் மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும் மாபெரும் வழிபாட்டை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமை ஏற்று வத்திக்கான முன்றலில் நடத்திவைக்கவுள்ளார்.இந்நிகழ்வையொட்டி போர்த்துக்கல் பாத்திமா மாதா திருத்தலத்திலிருந்து மாதாவின் பிரதான திருச்சுரூபம் வத்திக்கானுக்கு அந்நாளில் கொண்டுவரப்படவுள்ளது. 1920ஆம் ஆண்டு செய்யப்பட்ட இச்சுரூபமானது 11வது தடவையாக திருத்தலத்திலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறது. 12ஆம் திகதி இடம்பெறவுள்ள மாலை ஆராதனையைத் தொடர்ந்து இரவு முழுவதுமான திருவிழிப்பும், உரோம் நகரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 13ஆம் திகதி திருச்செபமாலைச் செபிக்கப்பட்டு பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் திருப்பலி ஒப்புக்கொடுப்பட்டு முழு உலகையும் அர்ப்பணிக்கும் சடங்கும் இடம் பெறும். மரியன்னையின் திருப்பயண நிகழ்வுகள் விசுவாச ஆண்டை முன்னிட்டு பல நிகழ்ச்சியில் ஒன்றாகவே இடம்பெறவுள்ளது.



# விசேட அறிவித்தல்

இதனூடாக கத்தோலிக்க விசுவாசிகளுக்கும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் / துறவியருக்கு அறியத்தருவது, பங்கில் ஏனைய நிறுவனங்களில் ஒழுங்கு செய்யப்படும், சங்கீத கச்சேரிகள், காணிவேல் மற்றும் (விற்பனைகளை) ஒழுங்கு செய்யும்போது தேவாலயத்தினதோ, நிறுவனத்தினதோ (பாடசாலை) அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதர்களின் பெயர்களை சூட்டுதல் முறையற்றது. அதாவது “புனித சூசையப்பரின் காணிவேல்”, “புனித மரியாள் மேலா”, “புனித அன்னம்மாள் மேலா”, “புனித அந்தோனியர் இசைக் கச்சேரி” போன்ற பெயர்களை பாவிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் இப்படியான நிகழ்ச்சிகளை நற்கருணை ஆண்டவர் குடிகொண்டிருக்கும் ஆலய முன்றலில் நடத்துவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றை ஒழுங்கு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்போது பொது இடங்களில் மற்றும் மைதானங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

அதிமேதகு கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாட்ட பேராயர்
28/08/2013

(படங்கள் : டிக்சன் பர்னாந்து



கொழும்பு 13 செக்கடித்தெருவில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா கடந்த எட்டாம் திகதி (8.9.2013) அன்று ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.தேவதாயின் பிறந்த தினமான அன்று இவ்விழாவும் கொண்டாடப்பட்டது மிகவும் சிறப்பாக அமைந்தது. இத்திருவிழாவிற்கு ஆயத்தமாக 9 நவநாட்களும் சிறப்பாக நடைபெற்று, தென்னிந்தியாவைச் சேர்ந்த கப்புச்சின் பிரான்சிஸ்கன் சபையை சார்ந்த அருட்தந்தை ஒகஸ்டின் நியூட்டன் அடிகள் மறையுரையாற்றி வழிபாடுகளை சிறப்பாக நடாத்தினார். 08ஆம் திகதி திருவிழா அன்று திருச்சுரூபப்பவனியும் அதன் பின் நற்கருணை ஆசீர்வாதமும், அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. பல ஆயிரம் மக்கள் இவ்விழாவில் கலந்து அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள்.

“கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்” (திபா : 51)

# இறைவனோடு உறவாட ஆன்மீகத் தியானம்

புதுக்கடை பண்டாரநாயக்க மாவத்தை புனித செபஸ்தியார் ஆலயத்தில் இம்மாதம் 19,20,21ஆம் திகதிகளில் நடைபெறுகின்றது.

**நேரம் – மாலை 6.30 தொடக்கம் 9.00 மணிவரை**

இவ்வான்மீகத் தியானமானது 22ஆம் திகதி ஞாயிற்று -க்கிழமை 7.45 மணித் திருப்பலியோடு நிறைவு பெறுமென அறியத்தருகின்றோம்.

ஆன்மீகத் தியானத்தை நடத்துபவர்
அருட்பணி சேவியர் அருள்ராஜ்
தூத்துக்குடி, தமிழ் நாடு, இந்தியா

**இறையருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

# ‘அன்பின் பரிணாமச்சங்கம்’

“அன்பின் பரிணாமச்சங்கம்” தனது இருபத்தொன்பதாவது அகவையில் 08.09.2013 அன்று காலடி பதித்துள்ளது. இற்றைக்கு இருபத்தெட்டாண்டுகளுக்கு முன் (1985.09.08) பேராசிரியர் எஸ்.ஜே.யோகராசா அவர்களின் விடா முயற்சியினாலும், ஆன்மீக தாகத்தினாலும் இச் சங்கமானது தளிர் விட்டு இன்று பெரு விருட்சமாக வளர்ச்சியடைந்துள்ளது. கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை இச் சங்கத்தின் ஸ்தாபகத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளார். மற்றும் இச் சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த மூப்பர்கள், பகுதிக்கூட்ட அங்கத்தவர்கள், செபக்குழு பாடகர்குழு அனைவரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இச் சங்கத்தின் மூலம் உடல் உள ஆன்மீக சுகம் பெற்றவர்கள் கோடான கோடி. இச் சங்கமானது தொடர்ந்தும் இறை அன்பில் மலர மனமாற வாழ்த்துகின்றோம். எதிர்வரும் வியாழக்கிழமை (19.09.2013) காலை 9.00 முதல் மாலை 4.00 வரை டிலாசால் புனித சூசையப்பர் ஆலயத்தில் துனை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்கள் தலைமையில் இடம் பெற இருக்கும் செப கூட்டத்திலும், நன்றித் திருப்பலியிலும் உங்கள் அனைவரையும் பங்கெடுத்துப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இறை அன்பை சுவைத்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பின் பரிணாமச்சங்கம்**

# 55வது வருட “சாம மிஹிர” சஞ்சிகை

55வது சாம மிஹிர சஞ்சிகையானது சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் ஆக்கங்களை கொண்டுள்ளது. இச் சஞ்சிகை 1959ஆம் ஆண்டு தொடக்கம் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வரும் அதேவேளை “சாம மிஹிர நத்தார் கலாப்பய” சஞ்சிகையுடன் சேர்ந்து வெளியிடப்படவுள்ளது.

உங்களுடைய கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் கவிதை ஆக்கங்கள் ஆகியவற்றை காலத்திற்கேற்றவகையான கருப்பொருளுடன் எழுதி, ஆசிரியர், சாம மிஹிர நத்தார் கலாப்பய” இல. 822/J, தர்மபால மாவத்தை, தேவத்தை, றாகமை என்னும் முகவரிக்கு 30.10.2013ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் : samamihira50@gmail.com

தகவல் : ஜயந்த ஸ்ரீ பத்மகுமார

# ஆலய முகப்பில் இயேசுவின் திருச்சுருபம் ஸ்தாபிக்கப்பட்டது

கண்டி மறைமாவட்டம் கடுகண்ணாவை பங்கு பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயரால் நிர்வகிக்கப்பட்டு வந்த தோட்டப்பகுதியில் வாழ்ந்து வரும் தமிழ், சிங்கள கத்தோலிக்க தொழிலாளர்களால் கட்டப்பட்ட புனித சவேரியார் ஆலயத்தின் முகப்பில் எந்த திருச்சுருபமும் இல்லாதிருந்தது ஒரு குறையாகவே காணப்பட்டதோடு, அங்கு ஒரு திருச்சுருபத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதும் எமது பங்கு மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்தது.

நீண்ட கால அக்கனவை நனவாக்கியது எமது பங்கு மக்களின் பாக்கியமே. இதற்கு காரணம் தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை தியோகுப்பிள்ளை கிறிஸ்டோபர் அடிகளாரே ஆவார்.

எமது பங்குத்தந்தையின் அயராத முயற்சியும், மக்களின் உதவியுடனும் ஆலய முகப்பில் இயேசுவின் திருச்சுரூபம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான பணி 3 மாதக் காலப்பகுதிக்குள் நிறைவுபெற்று, 25.08.2013 அன்று காலை ஞாயிறு திருப்பலியின் பின் அருட்தந்தை கிறிஸ்டோபர் அடிகளாரால் திருச்சுருபம் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்தோடு எதிர்வரும் காலத்தில் இப்பகுதியில் இயேசுவின் பாடுகளை தியானிக்கும் கல்வாரி ஒன்றினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் முழுமையடைய எல்லாம்



வல்ல இறைவனினதும், எமது பங்கின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் சவேரியாரின் பரிந்துரையும் ஆசீர்வாதமும் எம் அனைவர் மீதும் பொழியப்பட பிரார்த்திக்கின்றோம்.

**தகவல் : செல்வி நிதர்ஷனி சிவம்**
**கடுகண்ணாவை பங்கு**

# புதிய திருப்பீடச் செயலர் பேராயர் பரோலின்



புதிய திருப்பீடச் செயலராக பேராயர் பியத்ரோ பரோலின் (Pietro Parolin) அவர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். தற்போதைய திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சிசீயோ பெர்த்தோனே அவர்களின் பதவி விலகலை திருச்சபைச் சட்ட எண் 354இன்படி ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ், 58 வயதாகும் பேராயர் பரோலின் அவர்களை புதிய திருப்பீடச் செயலராக நியமித்துள்ளார்.

பேராயர் பரோலின், 2013ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதியன்று திருப்பீடச் செயலர் பணியைத் தொடங்குவார் எனவும், அதுவரை அப்பணியைச் செய்யுமாறு காதினால் பெர்த்தோனே அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுள்ளார். இத்தாலியின் வின்சென்சாவுக்கு அருகிலுள்ள Schiavonஇல் 1955ஆம் ஆண்டு தை மாதம் 17ஆம் திகதி பிறந்த பேராயர் பரோலின் 1986ஆம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி திருப்பீடத் தூதராகப் பணியில் சேர்ந்தார். திருப்பீடச் செயலகத்தின் நாடுகளுக்கு இடையேயான உறவுகள் துறையில்....

தொடர்ச்சி 15ம் பக்கம்

# புதுச்செட்டித்தெரு, வியாகுல மாதா பங்கின் நற்கருணை பெருவிழா

புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தில் மகா ஞானஒடுக்கம் நிகழ்வின் ஒரு பகுதியாக 01.09.2013 அன்று பி.ப 5.00 மணிக்கு நற்கருணை பெருவிழா இடம் பெற்றது. அன்றைய தினம் நற்கருணை நாதர் பவனியாக எடுத்துச் செல்லப்படுவதையும், அருட்பணி. பிலிப் (அ.ம.தி) அடிகளார் மறையுரை ஆற்றுவதையும், நற்கருணை ஆசீர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.







தகவல் மற்றும் படங்கள்
பீற்றர் றொபின்சன்

# “தேவ அன்னையின் பரிந்துரையை வேண்டுவோம்” மாத்தறை மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா



கடந்த 8.9.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று மாத்தறை மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருவிழா சிறப்புத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றிய காலிமறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை “கோபம் எல்லா இடமும் படர்ந்துள்ளது. அதனால் ஏற்படும் பிரச்சினைகளில் மக்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்வாறு இருக்கும் மக்களுக்கு ஆறுதலாக இருக்க தேவ அன்னையின் பரிந்துரையை வேண்டி பிரார்த்திப்போம்” என்று கூறினார். திருவிழாவின் முந்தைய நாள் மாலை ஆராதனையை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. நற்கருணை ஆசிர்வாதத்தையும், திருவிழாவின் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

**படங்கள் : டன்ஸ்டன் விக்ரமரத்ன**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
15 புரட்டாதி மாதம், 2013 ஞாயிற்றுக்கிழமை.

## கிறிஸ்துவின் அன்பே நமது இதயங்களை நிரப்பி மறைப்பரப்புப்பணிக்கு நம்மை உந்தித் தள்ளுகின்றது.

*விசுவாச ஆண்டின் இறுதி கட்டத்தை அடைந்துள்ள நாம் நமது விசுவாசத்தை ஒருகணம் சோதித்து பார்ப்போம். எத்தனை எத்தனையோ விசுவாசத்தையொட்டி நடாத்தப்பட்ட வழிபாடுகள், உள்ளத்தை சிந்திக்கத்தூண்டும் வண்ணம் தொங்கவிடப்பட்ட பலிப்பீட பதாதைகள் அனைத்தும் நம்முள்ளத்தை தொட்டதா? இல்லை அவ்வப்போது நமது வீட்டிற்கு வந்து தங்கிவிட்டுப்போகும் விருந்தினர்போல் மறக்கப்பட்டுவிட்டனவா? மானுடம் வேரோட்டமானது. மாற்றங்களை சந்தித்துக்கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் அனைவரும் நற்செய்தியை உறுதியுடன் பற்றிக்கொள்ள உதவும்பொருட்டு நமது பேராலயங்களிலும், உலகெங்கிலுமுள்ள தேவாலயங்களிலும், நமது இல்லங்களிலும் உயிர்த்த ஆண்டவர் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கையிட நமக்கு கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு தான் இந்த நம்பிக்கையின் ஆண்டு. அத்தோடு நற்கருணை கொண்டாட்டத்திலும் நமது நம்பிக்கையை கொண்டாட தூண்டும் ஒரு வாய்ப்பாகவும் இவ்வாண்டு அமைந்தது.*

*இறைவனோடு உறவுகொள்ளவும் திருச்சபையினுள் நுழையவும் வகை செய்யும் நம்பிக்கையின் கதவு எப்போதும் திறந்தேயுள்ளது. இறைவார்த்தை அறிவிக்கப்படும்போது அருளினால் நாம் மாற இதயம் அனுமதிக்கும்போது நாம் இந்த கதவை தாண்டிவர முடியும். நம்பிக்கையை அறிக்கையிடுதல் என்பது தந்தை மகன் தூய ஆவியாகிய அன்பே உருவான மூவொரு இறைவனை நம்புவதாகும். தந்தையாகிய இறைவன் காலம் நிறைவுற்றபோது தம் மகனை நமது மீட்புக்காக அனுப்பினார். இயேசுகிறிஸ்து தனது பாடுகள்,*

*மரணம், உயிர்ப்பு எனும் மறைபொருள் வழியாக உலகை மீட்டார். தூய ஆவி ஆண்டவரின் மகிமையின் வருகைக்காக காத்திருக்கும் திருச்சபையை காலந்தோறும் வழிநடாத்தி வருகின்றார்.*

*நம்பிக்கையின் வழியாக இப்புது வாழ்வு மானுட வாழ்வு முழுவதையும் உருவாக்குகின்றது. கிறிஸ்துவின் அன்பே நமது இதயங்களை நிரப்பி மறைப்பரப்புப்பணிக்கு நம்மை உந்தித் தள்ளுகின்றது. ஒவ்வொரு நாளும் அவரது அன்பை கண்டடைவதிலே விசுவாசிகளின் மறைப்பரப்பிற்கான அர்ப்பணம் புதிய ஆற்றலையும் தெம்பையும் பெறுகின்றது. இறைவார்த்தைக்கு செவிமடுத்து ஆண்டவரின் சீடர்களாகும் எண்ணமுடையோரின் இதயங்களையும் மனதையும் அது திறந்துவிடுகின்றது. உண்மையில் நம்முடைய நம்பிக்கையின் செயற்பாட்டிற்கும் நம்முடைய சம்மதத்தைத் தந்து ஏற்றுக்கொள்ளும், நம்பிக்கையின் உள்ளீட்டிற்கும் ஒரு ஆழமான ஒற்றுமை உண்டு. உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையோராவர். ஒருவர் கடவுளை நம்புவதற்கு எடுக்கும் முதல் முயற்சியே கடவுளின் கொடையென இதயம் நமக்கு அறிவுறுத்துகின்றது.*

*நம்பிக்கையில் தொடங்கி அதை வழிநடாத்துபவரும் நிறைவு செய்பவருமான இயேசுகிறிஸ்து மீது நாம் நமது கண்களை பதியவைப்போம். அன்னை மரியாள் வானதூதரின் வார்த்தையை ஏற்று அவர் கடவுளின் தாயாக போகின்றார் எனும் செய்தியை நம்பியதும் இந்த இறைநம்பிக்கையால் தான். அன்புச் செயல்களால் நாம் சாட்சி பகர்வதை தீவிரப்படுத்துவதற்கு இந்த நம்பிக்கையின் ஆண்டு ஒரு உன்னத வாய்ப்பாக அமைகின்றது.நிறைவான வாழ்விற்கு இறைநம்பிக்கை அவசியம். இதற்கு இறை உந்துதல் வேண்டும். எனவே இறைவனில் தங்கி அவரே தஞ்சமென வாழ்வோர் நிச்சயம் வெற்றியடைவர். எமது எண்ணங்களும் செயல்களும் இறைமயமாகட்டும். அப்போது நாம் வாழும் இந்த நம்பிக்கையின் ஆண்டு இறுதி கட்டமும் புது பொழிவு பெறும்.*




சிலுவையானது இயேசு தரும் விடுதலையின் முழுமையான சரணடைவைக் குறிக்கின்றது. தமது தந்தை மீதும், அவரது மக்கள் மீதும் வைத்த மட்டற்ற அன்பின் காரணமாகவே அவர் இவ்வாறு செய்தார். இது அவர் தாமே தெரிந்து கொண்டது. "என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்ளவில்லை. நானாகவே அதைக் கொடுக்கின்றேன்" (யோவான் 10:18). மரண ஆதிக்கத்தில் இருப்போரிடமும் தாமும் ஒன்றித்து தமது உயிரைக் கையளிக்க இயேசு சுயமாகத் தீர்மானிக்கின்றார். அவரது சுதந்திரம் ஆபத்தானது. அதன் விளைவே சிலுவை மரணம்.

### இயேசு விடுதலையின் முழுமையாய்...

நற்செய்தியில் இயேசுவை ஒப்புயர்வற்ற விடுதலையின் மனிதராக சந்திக்கின்றோம். அவரது விடுதலையின் ஊற்றாக விளங்கியது தன் தந்தையையும், அவரது அரசையும் அவர் அனுபவித்தமை ஆகும். இயேசுவிடம் பேராசை இருக்கவில்லை. "மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை (லூக் 9:58) சாதிக்க வேண்டும் என்ற அவாவினால் அவர் உந்தப்படவில்லை. "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல. மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்குமே வந்தார்" (மாற் 10:45).

மட்டுமீறிய பாசமும் அவரிடம் இருக்கவில்லை (மாற் 3:31-35) லூக் 2:41:52), அர்த்தமற்ற அச்சங்களும் அவரிடம் இருக்கவில்லை (மாற் 2:15, லூக் 15:1-2) பிறர் என்ன சொல்லுவார்கள், என்ன நினைப்பார்கள் என்பது பற்றி அவர் அஞ்சவில்லை. பழிச்சொல் உண்டாகும் என்றோ, தனது மதிப்புக் கெட்டுவிடும் என்றோ, தமது உயிரை இழக்கவோ அவர் அஞ்சவில்லை. அவரது ஒரே கரிசனை தந்தையையும் அவரது அரசையும் பற்றியதே. அவர் மக்களின் அங்கீகாரத்தையோ, பாராட்டையோ ஒருபோதும் தேடவில்லை. அதிகாரத்தில் உள்ளவர்களின் வன்முறைக்கு அவர் ஒருபோதும் அஞ்சியதில்லை (லூக் 13:31-33) "நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அவரைப் பழித்தபோது அவர் இறங்கி வரவில்லை. "உன்னையே விடுவித்துக்கொள்" என்றார்கள். அதற்கும் அவர் இசையவில்லை. ஏனென்றால் தன்னைக் காப்பாற்ற முனைபவன் மற்றவர்களைக் காப்பாற்ற ஒருபோதும் முன்வரமாட்டான்.

தனிமனித விடுதலையை இயேசுவிடம் முழுமையாகக் காண்கிறோம். அவரது இச் சுதந்திரமே அவரது சமகால சமூக, அரசியல், சமய - கலாச்சார அமைப்புக்களை எதிர்த்து நிற்க அவருக்கு வல்லமையைக் கொடுத்தது. அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறுகின்றார் (மாற் 2:23-36), தொழு நோயாளரைத் தொடுகிறார் (மாற் 1:41), சமூகத்தில் விலக்கப்பட்டவர்களான ஆயக்காரர், பாவிகளுடன், உணவருந்துகின்றார், (மாற்கு 2: 15-17, லூக் 15:1-2). அவர் அவ்வாறு சுதந்திரமாக வாழ்ந்து பேசி, செயற்பட்டது 1ஆம் நூற்றாண்டு யூதமதத்தின் சமூக , சமய, சமநிலையை ஆட்டம் காணச் செய்தது. அதன் விளைவே சிலுவை மரணம்.

### உண்மை தெரிவில் உறுதியுடன்

அவரது விடுதலை உணர்வும் அபாரத் துணிச்சலும் பார்ப்போருக்கு ஆச்சரியமூட்டும். இயேசு அவர்களுக்கு ஒரு தொல்லை. "இவர் கலிலேயா தொடங்கி யூதேயா வரை இவ்விடம் முழுவதிலும் மக்களுக்குப் போதித்து அவர்களைத் தூண்டி விடுகின்றார்" (லூக் 23:5). ஆனால். இயேசுவோ விளைவுகளைப் பற்றி அஞ்சவில்லை. போற்றுவார் போற்றட்டும், தெருப்புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும் ஏற்றது என் கொள்கையென்றால் துணிந்து சொல்வேன் தொடர்ந்து செல்வேன் என்று சென்றார்.

### சுதந்திரத்தின் மறுபக்கம்

சுதந்திரம் கடுமையானது, டெஸ் ரோயெஸ்வ்சி எழுதிய "உயர் நீதிமன்ற உசா குழுத்தலைவர்" என்றும் நூலில் "சுதந்திரம் மனிதன் சுமக்க முடியாத பெரும் சுமை" எனக் கூறப்பட்டுள்ளது. "வீழ்ச்சி" என்னும் நூலில் கேமஸ் என்பவர் "நானும் சுதந்திரத்திற்குப் பயப்படுகின்றேன்" என்று கூறுகின்றார். சுதந்திரம் ஆபத்தானது, அச்சம் தருவது, பாதுகாப்பற்றது. ஆகவே, நாம் பல வேளைகளில் ஒத்துப் போகிறோம். விட்டுக்கொடுக்கிறோம். பணிந்து போகிறோம், சமாளித்து வாழப் பழகிவிடுகின்றோம், பழகிவிட்டோம். நாம் துணிந்து நம்பிக்கையுடன் இடரை எதிர்கொள்வோமா? அல்லது பாதுகாப்பாக, பத்திரமாக திருப்தியாக இருக்க விரும்புவோமா?

தொடர்ச்சி பக்கம் 15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





இளையோர் பக்கம்

# 'அ' முதல் 'ஔ' வரை

அங்கம் 42

சென்ற இதழின் தொடர்ச்சி...

## எ..ப்படியும் என்றிருக்காதீர்கள்!

சாதிக்க முடிவெடுத்துவிட்டோம். பயிற்சியையும் தொடர்நது விட்டோம். இனி எப்படியாவது வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்று மட்டும் தப்புக் கணக்குப் போடாதீர்கள். அது உங்கள் சாதனைக்கு இழுக்கு. இறுதிப்போட்டி எப்படியாவது வெற்றிப் பெற்றே ஆக வேண்டும் என்ற நோக்கில் நம்பிக்கையை மூலதனமாக்காமல், ஊக்க மருந்தை மூலக்கூறாக்கி அவமானத்தைப் பெற்றுச் செல்லும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பட்டியலில் நீங்களும் இடம் பெற வேண்டுமா?

லஞ்சம் கொடுத்தால் சாதிக்கலாம்... ஆள்பலம் உண்டென்றால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்... என இனி திட்டமிடாதீர்கள். ஆசிரியர் சொன்ன பிறகும் பரீட்சையில் பார்த்தே எழுதமாட்டேன் என்று தீர்மானம் செய்த மகாத்மாவாக நீங்களும் நானும் மாற வேண்டும். எனவே, "இப்படித்தான் வெற்றி பெறுவேன்" என மகத்துவ நெறிமுறைகளை வகுத்துக் கொள்ளுங்கள். அதுவே சாதனைக்கு அழகு, ஏனைய குறுக்கு வழிகளெல்லாம் சாதனைக்கு இழுக்கு.

## ஏ..ணிப்படி போல் மாறுங்களேன்!

ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஒரு வழிப்பாதைதான் ஏணிப்படியில். தேவைப்படும்போது, மேல் ஏறியபின் கீழே இறங்கமாட்டேன் என்பதும், கீழே அமர்ந்துகொண்டு மேலே ஏறமாட்டேன் என்பதும் எந்த விதத்திலும் பயனளிக்கப் போவதில்லை. மாறாக தேவைக்கு ஏற்ப மேலே ஏறவும் கீழே இறங்கவும் தெரிய வேண்டும். சாதனையின் ஏணிப்படியும் அப்படித்தானே!.

புகழின் உச்சிக்குச் சென்றபின் "ஓகோ"வென அமர்ந்துகொள்ளக் கூடாது. சாதிக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டே ஏணிப்படியின் கீழே அமர்ந்துகொள்ளவும் கூடாது. மாறாக ஏணிப்படி காட்டும் ஒரு வழி பாதையில், இலக்கை மட்டும் கண்முன் கொண்டு பயணம் செய்வோம். அதில் ஏற்படும் ஏற்றங்களும் இறக்கங்களும் தற்காலிகமானவை என்பதையும் உணர்வோம்.

## ஐ..யம் தவிர்க்க வேண்டாம்!

தன்னை எலி என நினைத்துக்கொண்ட மனிதன் பூனையைக் கண்டு அஞ்ச ஆரம்பித்தான். அவனுடைய தேவையற்ற ஐயப்பாட்டை நீக்க நினைத்து மன உளவியலாளரிடம் அழைத்துச் சென்றனர். உளவியலாளரும் பல்வேறு பயிற்சிகளைக் கொடுத்தார். பல நாட்கள் கழித்து "இனி நீ வீட்டிற்குச் செல்லலாம். எல்லாம் ஓல் ரைட்" என்று அனுப்பி வைத்தார். வீடு திரும்பியவன் இடையிலே மீண்டும் ஒரு பூனையைப் பார்த்து பயந்து உளவியலாளரிடமே திரும்பி வந்துவிட்டான். விவரம் கேட்ட உளவியலாளர் மீண்டும் அவனிடம், "நீ எலி அல்ல, மனிதன் பயப்படாதே" என்றார். அதற்கு அந்த நோயாளி, "சரி, டாக்டர். நான் எலி அல்ல என்று எனக்குத் தெரியுது, ஆனால் அந்தப் பூனைக்குத் தெரியாதே. அதனிடம் போய் சொல்லுங்களேன்" என்றான்.

பல வேளைகளில் நமது ஐய உணர்வுகளும் தேவையில்லாத காரணங்களினால் உருவாகின்றன. முயற்சி செய்யும் முன்பே ஒரு வேளை எதிர்பார்த்த அளவிற்கு நடக்காவிட்டால், அதற்கு எதிர்பதமாக எதுவும் ஆகிவிட்டால், தோல்வி மட்டுமே கிடைத்துவிட்டால் எனப் பல "விட்டால்"களை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறோம். அதனால் எதைத் தொடங்கும் முன்னும் அச்ச உணர்வுகளை அணைத்துக் கொண்டிருக்கிறோம். சாதிக்க வேண்டுமென்றால் ஐயப்பாடுகள் என்னும் அச்ச உணர்வுகள் அகல வேண்டும். நம்பிக்கை என்னும் தும்பிக்கைகள் முளைக்க வேண்டும். எனவே ஐயத்தை தவிர்க்க வேண்டாம் மாறாக தகர்த்தே எறியுங்கள்

## ஒ..ரு போதும் தள்ளிப்போடாதீர்!

எதையும் தள்ளிப் போடுவதும், கடைசி நேரம் அவசர அவசரமாகச் செய்து முடிப்பதம் பலருக்குக் கை வந்த கலையாகிவிட்டது. காலம் தென்றல் மாதிரி. பட்டென்று தோன்றிச் சட்டென்று மறைந்துவிடும். வரும்போதே அதன் சுகத்தை அனுபவித்தால்தான் உண்டு. எனவே, "இன்றே நன்று" என்ற முடிவோடு சாதனையாளர் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் அனுபவிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் வெற்றி நிச்சயம். சற்று காலம் கடந்தாலும், மழைக்காலத்தில் பட்டென்று தோன்றிய சூரியக் கதிர்களை நம்பி உப்பு விற்க சென்றவன் கதைப்போல எதுவுமே வாழ்வில் மிஞ்சாமல் கடந்துவிடும்.

## ஓ..டும் நதிபோல் இருங்கள்

ஓடிக்கொண்டேயிருப்பதால்தான் நதி என்று ஓய்வெடுக்க நதி முனைந்திட்டதோ அன்றே குட்டையாகி நாற்றமடிக்க தொடங்கிவிடும். ஓடிக் கொண்டிருப்பது வரை நதி தன்மீது பலவற்றைச் சுமந்து செல்கிறது. நல்லது - கெட்டது. சுத்தம் - அசுத்தம் எல்லாவற்றையும் சமமாகக் கருதி சுமந்து செல்கிறது. எனவே நாற்றமடிப்பதில்லை. ஆனால் என்று குட்டையாக மாறி விட்டதோ அன்று சிலவற்றை மட்டும் சுமக்கிறது. நாற்றமடிக்கவும் ஆரம்பிக்கிறது.

சாதிக்க விரும்புவோரும் நதியைப்-போல ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும். ஓடும் பாதையில் பலரும் பலவாறு ஏளனப்படுத்தலாம், திட்டித் தீர்க்கலாம், பாராட்டலாம், புகழலாம். அனைத்தையும் சமமாகக் கருதிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். மாறாக, புகழ்ந்து விட்டார்களே என்பதற்காக வெற்றிப் பிரமிப்பில் அமர்ந்து விடுவதும், அல்லது இகழ்ந்துவிட்டார்களே என்பதற்காக இருக்கையை விட்டு இனி நகரமாடடேன் என்பதும் நதி குட்டையாகி நாற்றமடிக்கும் நிலைமைக்கு ஆளாகிவிடும். எனவே சாதிக்க விருப்பம் உண்டெனில் நதியாக மாறுங்கள் உயிர்மூச்சு உள்ளவரை.

## ஔ..வியம் தவிர்ப்போம்!

எல்லோரிடமும் இருப்பது, ஆனால் யாருமே விரும்பாதது. எனவே எல்லோருமே இதிலிருந்து விடுபட முயற்சிக்கின்றனர். என்ன அது? தெரியவில்லையா? அதுதான் ஔவியம். புரியவில்லையா! ஔவியம் என்றால் "பொறாமை" என்றே அர்த்தம். பல முடக்குத்தன ஆமைகளில் இதுவும் ஒன்று. கடலும் அலையும் பொறாமைப்படவில்லை, எனவே தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் ஆறறிவு மானுடத்திடம் மட்டும் பொறாமை உயிரணுவாய் உள்ளது. மனித இயக்கத்தில் இறக்கமும் நகர்தலில் தேக்கமும் இந்த உயிரணுவின் விளைவே! சாதிக்க முனைவோர் இதை வென்றெடுக்க வேண்டும்.

**பொறாமையை நிந்திப்போம்**
**இயங்கு சக்தியை**
**நாளும் நமதாக்குவோம்.**

# உன்னையே நம்பு

உங்களையே நம்ப வேண்டிய முதல் ஆள் நீங்கள் தான். எந்த விஷயமானாலும் சரியே. உங்களையே நம்புங்கள் உங்களுக்கு உள்ளேயே உள்ள உங்களுடைய சொந்த சிறந்த மனிதரை கண்டடையுங்கள். உங்களுக்கே உரித்தான தலைவர் நீங்கள் தான் அற்புதமான ஒன்று நிகழப்போகிறது என்று இதயப் பூர்வமாக நம்புங்கள். உங்களது வாழ்க்கையை நேசியுங்கள், உங்களது ஆற்றல்கள், திறமைகள், உங்களது சொந்த நன்மை நலன்களை நம்புங்கள். வெற்றியை இன்றே வாழ்வின் இறுதிநாள் என்று நினைத்து ஒவ்வொரு நாளிலும் வாழுங்கள். தன்னம்பிக்கை என்னும் ஒரு சிறு தீப்பொறி உங்களிலிருந்து வெளியே தெறித்து வந்து ஒளிதரட்டும். உங்களது சொந்த வானவில்லின் வண்ண ஜாலத்தைப் படையுங்கள். எல்லா வாய்ப்புக்களையும் ஆக்கப் பூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ள தயாராக இருங்கள். எப்போதும் உங்களை பொறுப்புக்களையும் வாய்ப்புக்களையும் சிந்தித்து பார்ப்போம். படிப்பில் முன்னேறுகிறோம். தொழில் மேம்பாடு அடைகிறோம். வேலையில் பதவி உயர்வு அடைகிறோம். ஓடி ஓடி எந்திர கதியில் நாம் செய்து கொண்டிருப்பவைகள் நாம் மனம் விரும்பித் தெரிவு செய்யாத சேர வேண்டாத இடம் நோக்கியும் இட்டு சென்று விடும் என்பதை

> **"நீங்கள் வெற்றிவாகை சூடியவராக வர வேண்டும் என்று விரும்பினால் மற்றவர்கள் உங்களால் முடியாதது என்று நினைத்தாலும் என்னால் முடியும் என்று நீங்கள் உங்களையே நம்ப வேண்டும்**
> **– ஆபிரகாம் லிங்கன் –**

அடைந்தே தீர வேண்டும் என்ற உங்களது முடிவான தீர்மானத்தை நெஞ்சிலே நிறுத்துங்கள். நம்மிடம் உள்ள கொடைகள், திறன்கள் ஆகியவற்றை நம்மால் பாராட்ட முடியும் என்றால், நம்மிடம் இல்லாதவற்றை நினைத்து நாம் மனச்சோர்வு அடையமாட்டோம் என்றால் மட்டுமே நம்மால் வெற்றி பெற்றவராக முடியும். வாழ்வில் நம்பிக்கை வையுங்கள். வாழ்க்கை உங்களுக்கு வழங்கும் ஒவ்வொன்றிலும் நம்பிக்கை வையுங்கள். இந்த உயிர்த்துடிப்புடனும் இயக்க ஆற்றலுடனும் இருப்பேன் என்கிற அக எழுச்சியுடன் ஒவ்வொரு நாள் காலையிலும் எழுங்கள். ஒவ்வொரு நாளும் இவ்வுலகத்தின் உயர்வான, வியக்க வைக்கின்ற அழகினை கண்டுபிடியுங்கள், உங்களுக்குள்ளே உள்ள வாழ்க்கையை ஆராய்ந்து தேடுங்கள். அதனை தழுவிக் கொள்ளுங்கள்.

உங்களைச் சுற்றி வாழ்பவர்களது ஆற்றல்களையும் திறன்களையும் உற்று நோக்குங்கள். வியப்படையுங்கள், எழுச்சி கொள்ளுங்கள் பிறரையும் எழுச்சி பெறச் செய்யுங்கள். ஒவ்வொரு நாளையும் நம்பிக்கையுடன் எதிர் நோக்குங்கள். ஏனெனில் இந்த ஒருநாள்தான் நமக்குச் சொந்தமானது நம்புங்கள்.

உங்களால் இன்னமும் சிறிது முடியும் என்கிறவரை விட்டுவிடாமல் முயற்சி செய்யுங்கள். வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்வதின் மூலம் நாம் துணிச்சலுடன் வாழக் கற்றுக்கொள்கிறோம்.

அன்பில் நம்பிக்கை வையுங்கள். நமது வாழ்வில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மதிப்பு மிக்க வாழ்க்கை பற்றிய அன்பு பற்றிய பாடமே. தேடினாலும் கிடைக்காதது அன்புதான். அன்பைப் பெற்றுக்கொள்ள எளிதான வழி அதனை நீங்கள் மற்றவர்களுக்கு அள்ளி வழங்குவதுதான். அன்பை இழப்பதற்கு மிக வேகமான வழி எவருக்கும் வழங்காமல் பதுக்கிக் கொள்வதுதான். அன்பை தக்க வைத்துக்கொள்ள சிறந்த வழி அதற்கு சிறகுகளைத் தந்துவிடுவதுான்.

உங்கள் கனவில் நம்பிக்கை வையுங்கள். கனவுகள் இல்லாதிருப்பது நம்பிக்கை இல்லாதிருப்பதே. நம்பிக்கை இல்லாதிருப்பது குறிக்கோள் இல்லாதிருப்பதே. வாழ்க்கை என்பது பந்தயமல்ல. அது ஒரு இனிமையான பயணம். அதன் ஒவ்வொரு அடியையும் சுவைத்து பயணிக்க புன்னகை பூத்தவாறு இருங்கள். உங்கள் மூலமாக கதிரவன் ஒளி வீசட்டும். உங்கள் திறமையில் நம்பிக்கை வையுங்கள். வாழ்க்கை நமக்கு அள்ளி வழங்குகின்ற அளப்பரிய பல நேரங்களில் மறந்து விடுகிறோம். நமக்கென இலட்சிய கனவுகள் உண்டு. நமக்கென இலக்குகள் உண்டு. மேலும் வேண்டும் என்றே நான் விரும்புகிறோம். நிகழ்காலத்தைவிட எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். மகத்தானவை நமக்குத் தேவை. மேலும் சிறந்தவை நம் குழந்தைகளுக்கு தேவை என்றே நாம் விரும்புகின்றோம். இருப்பினும் இப்போது முதற்கொண்டே ஒவ்வொரு நாளுமே நீங்கள் இதைப் படிக்கிறபோதே நமது எதிர்காலத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மறந்து விடுகிறோம். இவை எல்லாவற்றையும் விட கடவுள் மேல் நம்பிக்கை வையுங்கள். ஒவ்வொரு கனமும் அவர் உங்களை பார்த்துக் கொண்டேயிருக்கிறார். நமது இருத்தலின் அடிப்படையே இதுதான். தூய பவுலடியார் சொல்லுகிறார் "நாம் அவருள் வாழ்கிறோம், இயங்குகிறோம், இருக்கிறோம்"

**உங்களது மனத்தை நீங்கள் ஆளுங்கள் இல்லாவிட்டால் அது உங்களை ஆண்டுவிடும்'**





# மாற்றத்தை நோக்கிய மறைக்கல்வி

மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து, மாணவருக்கும், இளையோர்களுக்கும், ஏன் வளர்ந்தோருக்கும் மறைக்கல்வி அவசியம் என செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது மறைக்கல்வி நடுநிலையங்கள். இலங்கை பூராகவும் மறைக்கல்வியானது இரு மொழிகளிலும் அதாவது தமிழ், சிங்கள மொழிகளிலும் கற்பிக்கப்படுகின்றது. சில பங்குகளில் காலத்தின் தேவைக்கேற்ப ஆங்கில மொழிகளிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்களிடையே மறைக்கல்வி ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஞாயிறு மறைக்கல்வி 16ஆம் நூற்றாண்டில் இருந்தே வேரூண்டத் தொடங்கி இன்று வரை பங்குகளில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது எனலாம்.

மறையறிவை வளர்க்க நடுநிலையத்திலிருந்து அரிய பல முயற்சிகள் வரையறுக்கப்பட்டு, புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பொருத்தமான படிப்பினை முறையை கையாளுகிறார்கள். ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவது, பிரத்தியே வகுப்புக்களும் வழங்கப்படுகிது. மாணவர்களுக்கு விவிலியப் போட்டி, 2ஆம் தவணை, 3ஆம் தவணைப் பரீட்சைகள், மறைக்கல்வி தினம், சிறுவர் தினம், பல கருத்தரங்குகள் எனப் பயனுள்ள முறையில் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மறைக்கல்வி சார்ந்த இத்தகைய முயற்சிகள் நம் மாணவர் மத்தியில் உண்மையான கிறிஸ்தவ மனநிலையை ஆழமாகவும், அழுத்தமாகவும் உருவாக்கியுள்ளன என நாம் கூற இயலாது. காரணம் மேற்கூறிய நம் மறைக்கல்வி செயற்பாடுகள் அனைத்தும் சிறப்பானவையே என்றாலும், மறைக்கல்வியின் நோக்கத்தை முழுமையாக அடைய அவை போதிய அளவு உதவவில்லை என்பதே கண்கூடு. ஏனெனில் கிறிஸ்தவ நம்பிக்கை என்பது வெறும் பாடங்களை படிப்பதிலும், பரீட்சை எழுதுவதிலும் மட்டுமல்ல, மாறாக கிறிஸ்தவ நம்பிக்கையையும், அது சார்ந்த விழுமியங்களையும், மாணவர்களின் உள்ளங்களில் ஆழ ஊன்றி வளர்த்து அவர்களை இறையாட்சியின் மனிதர்கள், குடும்பங்கள், சமூகங்கள் என வளர்த்தெடுப்பதே மறைக்கல்வியின் அடிப்படை நோக்கம்.

ஆனால் இத்தனை ஆண்டுகளாக நாம் வழங்கியுள்ள மறைக்கல்வி அத்தகைய மனிதர்களையும், குடும்பங்களையும், சமூகங்களையும் உருவாக்குவதில் அதிக வெற்றி அடையவில்லை என்பதே உண்மை. மறைக்கல்வியால் மட்டும் அத்தகைய பணியை முழுமையாகச் செய்து முடிக்கலாமா? என்ற வினா எமது எண்ணத்தில் தோன்றலாம். உண்மைதான் எனினும் நலமான மறைக்கல்வி இறை ஆட்சி உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்பு செய்கின்றது என்பதை எவரும் மறுக்க இயலாது.

இயேசுவும், இறை ஆட்சியின் செயல் வீரராகவும், போதகராகவும் இருந்தார். அதுமட்டுமல்ல அந்த செயல்களையும், போதனைகளையும் தம் சீடருக்கும், பிறருக்கும் விளக்கியுரைக்கும், நல்ல ஆசிரியராகவும் விளங்குகின்றார் (மத் 9:14-17, 12: 1-7). எனவே இன்று வழங்கப்படும் மறைக்கல்வி எந்த அளவுக்கு நம்பிக்கையின் உருவாக்கமாகத் திகழ்கின்றது. அவ்வாறு திறம்பட செயல்பட என்னென்ன மாற்றங்கள் புகுத்தப்படலாம் என்பது பற்றி சிந்திப்போம்.

## அறிவுசார் மறைக்கல்வி

இன்றைய மறைக்கல்வி நமது அறிவை வளர்ப்பதற்காகவே அமைந்துள்ளது. சமய தகவல்களை பற்றி நிறைய தகவல்களைத் தருவதாகவே இருக்கின்றது. அதாவது விவிலியம், திருச்சபை வரலாறு, புனிதர்கள், சட்டங்கள், கோட்பாடுகள் என்பன பற்றிய விளக்கங்கள் இவை ஒட்டியதாகவே மறைக்கல்வி, பாடசாலை நூல்களும் அமைந்திருக்கின்றன. இப்பாடசாலை புத்தகங்களை மையமாகக் கொண்டுதான் பாடத்திட்டம் அமைத்து மறைக்கல்வி பாட நூல்களும், நிறைய தகவல்களைத் தருவதற்கும் முக்கியத்துவம் தருகின்றன.

ஆனால் மறைக்கல்வி என்பது சமயம் சார்ந்த உண்மைகளையும், கோட்பாடுகளையும், சட்டங்களையும், சடங்குகளையும் அறிவு சார்ந்த முறையில் தெரிந்திருப்பது மட்டுமல்ல, அதைவிட அந்த கோட்பாடுகளும், சட்டங்களும், சம்பிரதாயங்களும் உணர்த்தும் இறை ஆட்சி இலட்சியத்தையும், விழுமியங்களையும் வாழ்வாக்கி தன்னாலும் மற்றவர்களில் வாழப்படுவதாக மறைக்கல்வி அமைய வேண்டும்.

பரீட்சைக்கு மட்டும் பிள்ளைகளை தயார்படுத்தாது மாணவர்களிடையே உறுதிப்பாடுகளை வளர்க்கும், வாழ்வுக் கல்வியாக மறைக்கல்வியை நடத்துவதே சிறந்ததாக அமைகின்றது. இதற்கு ஆசிரியர்கள், ஏனைய பாடங்களைப்போல் படித்து பரீட்கைளை எழுதினால் மட்டும் போதாது ஆசிரியர்கள் பயிற்சிகளை அவர்கள் பெறவேண்டும். காரணம் இன்றைய மறைக்கல்வி ஆசிரியர்கள் அறிவு சார்ந்த ஒன்றாகதான் மறைக்கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றனர். மறைக்கல்வியில் கற்றுக் கொள்ள வேண்டிய அர்ச்சிஸ்ட சிலுவை அடையாளம், 10 கற்பனைகள், திருச்சபையின் கட்டளைகள், பரிசுத்த ஆவியின் கொடைகள், பொது செபங்கள் என்று அடிப்படை பொதுவிடயங்கள் இதுபோன்றவற்றில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துவது குறைவு.

உதாரணம் :~

பாலர் பாடசாலை, முதலாம் தரம் பயிலும் சிறுவர்களுக்கு எவ்வாறு மறைக்கல்வியை கற்பிப்பது என்பது பற்றிய அறிவு மறையாசிரியர்களுக்கு தேவை. வகுப்பு தொடக்கத்தில் இருந்து முடியும் வரை அம்மாணவர்கள் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு எழுதுவதோடு அன்றைய மறைக்கல்வி வகுப்பு முடிந்து விடுகிறது. ஆகவே மறையாசிரியருக்கு பயிற்சிகள் அவசியமாகின்றது. இல்லையெனில் வெறும் அறிவு சார்ந்ததாகவே மறைக்கல்வியாக அமைவதோடு மட்டுமல்லாது அது வகுப்பறை பாடமாகவே முடிந்து விடும். ஏனைய பாடங்கள் மாணவர்களுக்கு சுமையாக இருப்பதுபோல் மறைக்கல்வியும் பலவேளைகளில் அவ்வாறு மாறிவிடுகின்றது.

பரீட்சைகள் முடிந்ததும் ஏனைய பாடங்களை மறந்துவிடுவதுபோல் மறைக்கல்வி வகுப்புக்களில் கற்றுக் கொண்டவைகளுள் பெரும்பான்மையானவற்றை மாணவர்கள் மறந்து விடுகின்றனர். ஆகவே மறைக்கல்வியும் வாழ்வை வளப்படுத்தாத, வழிப்படுத்தாத அறிவும் பெருக்கமாகவே அமைந்து விடுகின்றது.

## நம்பிக்கையை உருவாக்கும் மறைக்கல்வி

இன்றைய நமது மறைக்கல்வி அறிவை வளர்க்கும் அளவுக்கு ஆளுமையை வளர்ப்பதில்லை. விவிலியத்தில் தகவல்களைச் சொல்லித்தரும் அளவுக்கு வாழ்வுக்கான விவிலியச் செய்திகளை முன்வைப்பதில்லை. செபங்களை மனப்பாடம் செய்யவைக்கும் அளவுக்கு இதயப்பூர்வமாக செபிக்கக் கற்றுத் தருவதில்லை. நம்பிக்கைப் பற்றிய அறிவை வளர்க்கும் அளவுக்கு நம்பிக்கையை வளர்ப்பதில்லை. இயேசுவைப் பற்றிச் சொல்லித்தரும் அளவுக்கு அவரைச் சந்தித்து சரணடைய அது உதவுவதில்லை. கோட்பாட்டு விளக்கங்களை கற்றுத்தரும் அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவராக வாழக் கற்றுத் தருவதில்லை. இத்தகைய குறைகளை களைந்து நம்பிக்கை உருவாக்க கிறிஸ்தவ வாழ்வுக் கல்வியாக நமது மறைக்கல்வி மாற்றியமைக்கப்படுவது இன்றியமையாதது.

நமது நம்பிக்கையை நாம் ஆழமாக தெரிந்து கொள்வதும், அது நமது அன்றாட வாழ்வு செயற்பாடுகளுக்குச் சொல்லும் செய்திகளை நன்கு புரிந்து கொள்வதும் மறைக்கல்வியில் முக்கிய பரிமாணம் என்பதை நாம் மறுக்க இயலாது. ஏனென்றால் நாம் அதை நமக்கு தெரிந்து தெளிவுப் பெற்றிருப்பது நாம் வாழ்வதற்கும், பிறருக்கு வழங்குவதற்கும் ஆகும். இதை நாம் சரியாக அறிந்து தெளிவு பெறாததால் தான் இன்று கத்தோலிக்கருள் பலர் அடிப்படைவாதத் குழுக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் தர இயலாது குழப்பமடைகின்றனர். சிலர் அவர்கள் தரும் போலி விளக்கங்களை உண்மையென எளிதில் நம்பி விடவும் செய்கின்றனர்.

ஆகவே மறைக்கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அறிவு சார்ந்த மறைக்கல்வியை இதயம் சார்ந்த உறுதிப்பாடுகளாக உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வயதினரையும், பருவத்தினரையும், அவர்களுடைய தனிப்பட்ட அல்லது சமூக வாழ்வின் வளர்ச்சிகள், படிப்புக்கள், உறவுகள், ஈடுபாடுகள், நிகழ்வுகள், விளையாட்டுக்கள், பிரச்சினைகள் என்பனவற்றில் இறைவன் எவ்வாறு அவர்களைச் சந்தித்து தமது அருளையும், அழைப்பையும் தருகின்றார் என அவர்களைக் கண்டுணரச் செய்வது மறைக்கல்வியின் முதலான பணி.

- ✠ தந்தை, இயேசுக் கிறிஸ்து, தூய ஆவி, இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கை வரலாறு, புனிதர்களையும், அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் இறையனுபவங்களாகக் காட்டுவது.
- ✠ ஆசிரியர் நமது சமய அனுபவங்களை பகிர்ந்து கொள்வது.
- ✠ வாழ்வுக் கல்வியாக மறைக்கல்வி அமைவதற்கு இன்றியமையாத வழிமுறை அது மாணவர்களின் உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கும் பதில் வழங்குவதும் முக்கியம். மாறாக பாடங்களைப் படிப்பதும், கேள்விகளை கேட்பதும் அப்பியாசப் புத்தகத்தில் பக்கம் பக்கமாக எழுதுவதும், மாணவரை செய்ய வைப்பது மரபு வழி முறைக்கு உள்ளாகின்றது.

ஆதலால் மாணவர்களைப் பேச விடவேண்டும். அவர்களின் கேள்விக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். கேள்விகளைப் பற்றி கலந்துரையாடவும், ஆசிரியர் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக இன்றைய சமுதாயத்தில் உள்ள பல்வேறு மூட நம்பிக்கைகள், திருநாள் கொண்டாட்டங்கள், ஜூபிலிகள், குருக்களின் பிறந்தநாள் தினங்கள், ஆடம்பரங்கள் பற்றி சுய அடிப்படைவாதக் குழுக்களின் கேள்விகளுக்கு குருத்துவ துறவற அழைப்பு விளக்கத்தை அறிந்து மறைக்கல்வி மாணவர்கள் ஈடுபாட்டுடன் பங்கேற்கவும், அவர்கள் சமூக மாற்றுச் செயல் வீரர்களாக உருவாகவும் அவர்களுக்கு நிச்சியம் உதவும்.

ஆகவே மாணவர்களை பரீட்சைக்கு மட்டும் ஆயத்தப்படுத்தாமல் மறைக்கல்வி வகுப்பிலே மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் விளையாட்டுக்கள், கலைகள், சிறப்பாக புதிய ஊடகங்கள் ஆடல், பாடல், நடித்துக் காட்டல் என்பன மறைக்கல்வியில் மாணவர்களின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் வளர்ப்பதுடன் சமய உண்மைகளை உணர்வுப்பூர்வமாக உள்வாங்கவும் உதவுகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது மறைக்கல்வியை தரமான ஒழுங்கான மறைக்கல்வியாக மாற்றுவது ஒவ்வொரு மறையாசிரியரின் கையிலேயேதான் இருக்கின்றது. இதற்கு மறைக்கல்வி ஆசிரியர்களின் பயிற்சியும் இன்றியமைாததாகும். மறைக்கல்வி ஏனைய பாடங்களைப் போல் பரீட்சை எழுதும் பாடமாக மாறாமல் அது வாழப்பட வேண்டிய பாடமாக வேண்டும். வாழ்வாக்கப்பட வேண்டிய பாடம். ஆகவே நல்லதொரு மறைக்கல்வியை மாணவர்களுக்கு வழங்குவோம். கிறிஸ்தவ நம்பிக்கையில் அவர்களை வளர்ப்போம். இறையாட்சியில் செயல்வீரராக மாற்றுவோம்.

**ஆக்கம்: பெர்னத்**




அருள்பணி. வே. அமல்ராஜ் OMI

பயணிகளின் பாதுகாவலியே ~ எம்
வாழ்வுப் பயணத்தின் பாதையே
கருணையின் கடலே காண்போரின் விழியே
எம்சாட்டி வழி நின்று வாழ்விப்பவளே!

வங்கக்கடலில் நீ ஆரோக்கிய அன்னை
வாடிப்பட்டியில் நீ வாடிமா அன்னை
மயிலையிலே நீ உபகார அன்னை
யாழ் குடா நாட்டில் நீ சித்தாந்திரை அன்னை

ஆயிரம் ஆயிரம் காட்சிகள் நீ கொடுத்திருந்தாலும்
சாட்டியில் நீ கொடுத்த காட்சி அபரிமித அற்புதம்
நானூறு ஆண்டுகள் வரலாறு படைத்த
அழியா வழிகாட்டும் கலங்கரை விளக்கம் நீ!

நீ அற்புதம் செய்தது அன்றமட்டும் அல்ல
நீ அற்புதம் செய்வது இன்று தானம்மா
தமிழ் ஈழத்தின் தேவதாய் நீ
இந்த வேலணைச் சாட்டியின் புனிதம் நீ!

யாழ்குடா நாட்டின் புதுமை மிகு அன்னையே
சாட்டி என்னும் புனித இடம் தந்த கொடையே
வழி இழந்த ஈழத்தை வாழ வைப்பவளே
உமக்கு விழா எடுப்பது எமது உரிமை!

பனைமரம் ஈழத் தமிழரின் துணை மரம்
உம் அருள்வரம் எம் அனைவரின் தனிவரம்
பனைமரம் எம் தஞ்சமாய் மாறியது போல்
உம்மை தேடிவரும் அனைவருக்கும் நீ தஞ்சமாவாயே!

அழகோவியமே என் அன்னை மரியே
அடைக்கலத்தின் அமுதசுரபியே
அன்பின் அருளின் அடித்தளமே
அண்டி வருபவரை அரவணைக்கும் தாயே!

அம்மா அம்மா என்று அழைப்பவரை
மகனே மகளே என்று ஆதரிப்பாயே
மரியே மரியே என்று மன்றாடுவோரை
அருளால், ஆசியால் நிரப்புவீரே!

அன்று தத்தளிக்கும் கப்பலைக் காத்த நீ ~ இன்று
வாழ்வில் தத்தளிக்கும் குடும்பங்களை காத்தருள்வாயே
அன்று நம்பியவரை ஆசீர்வதித்த நீ ~ இன்று
உம்மை நம்பி வரும் அனைவரையும் ஆசீர்வதிப்பீரே!

எம் சித்தாந்திரைத் தாய்க்கு நாம் எடுக்கும் விழா
நம் தாய்க்கு நாம் காட்டும் அன்பின் வெளிப்பாடு
தாயைப் போல பிள்ளைகளாய் ~ ஒன்று சேர்ந்து
விழா எடுப்போம் ஆசீர் பெறுவோம்!

## அமுத மொழிகள்

* "ஞானத்தின் மேல் நான் அன்புகூர்ந்தேன்; என் இளமை முதல் அதைத் தேடினேன்; என் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள விரும்பினேன்" (சாஞா 8:2)
* "ஞானம் இறந்த காலத்தை அறியும்; எதிர்காலத்தை உய்த்துணரும்; உரைகளின் நுட்பங்களையும், புதிர்களின் விடைகளையும் அறியும்" (சாஞா 8:8)
* "ஞானத்துடன் கொள்ளும் உறவால் இறவாமை கிட்டும்; அதனுடைய நட்புறவில் தூய மகிழ்ச்சி பிறக்கும்; அதனுடைய உழைப்பால் குறைபடாத செல்வம் கொழிக்கும்" (சாஞா 8:18)
* "தற்பெருமையில் ஒருவர் எத்துணை நிறைவு




# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

## மனித உறவு



ஒவ்வொரு மனிதனுக்கும் உறவு, தொடர்பு தேவையான ஒன்றாகும். குடும்ப வாழ்வில் கணவன் மனைவிக்கு இடையில் நல்ல உறவு தேவைப்படுகிறது. திருமணம் முடித்ததும் தமது குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் வாழவே எல்லோரும் விரும்புவர். இருப்பினும் தமது குடும்ப வாழ்வை நன்றாக ஆக்கிக் கொள்வதற்கு எது தேவை என்பதை அறிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. பலர் அதிகம் கஷ்டப்படுவது பணம் சம்பாதிக்கவே. பணம் சம்பாதித்து சுகபோகமான வீட்டைக்கட்டி, வீடு நிறையப் பொருட்களைச் சேர்த்து வைக்க இராப் பகலாகக் கஷ்டப்படுவார்களேயொழிய குடும்பத்தில் உறவைக் கட்டியெழுப்ப கஷ்டப்பட வேண்டும் என்பதை அறிவதில்லை.

குடும்பத்தில் கணவன் ஒருவருட மேற்படிப்புக்காக வெளிநாடு செல்கிறார். விமான நிலையத்தில் வழியனுப்ப மனைவி பிள்ளைகள் செல்கின்றனர். ஒரு வருடம் முடிந்ததும் கணவன் திரும்பி வருவார் என்று தெரிந்தாலும் இறுதியாக விடைபெற்று விமானம் பறக்கும்பொழுது மனைவி பிள்ளைகள் அழுகின்றார்கள். இங்கே உறவு தற்காலிகமாக விலகும்போது அவர்களால் அதைத் தாங்க முடியவில்லை.

ஒருநாள் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் என்னிடம் வந்தார். அவர் ஆலோசனை பெறுவதற்காக வந்தார். "நான் இரண்டு முறை தற்கொலை செய்ய முயன்றும் முடியவில்லை. இன்று உங்களிடம் வந்தது எனது பிரச்சினைக்கு விடை கிடைக்கவில்லையேல் இறப்பதே மேல் என்ற எண்ணத்துடன் வந்தேன்" என்றார். அவரோடு அன்பாகப் பேசி அவரது பிரச்சினைகளுக்குச் செவிமடுத்தேன். அவரிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. வசதியான வீடு, வாகனம், பணம் எல்லாம் இருந்தன. ஆனால் சில காலமாக மனைவி பிள்ளைகள் அவருடன் கதைப்பதில்லை. எவ்வளவு பணம் சொத்துக்கள் இருந்தும் தான் அன்பு செய்யும் மனைவி பிள்ளைகளுடன் இருந்த உறவு முறிந்ததும் அதைத் தாங்க அவரால் முடியவில்லை.

வாழ்வுக்கு அர்த்தத்தைத் தருவதும், மகிழ்ச்சியைத் தருவதும் ஆழமான அன்புறவிலேயே என்று கூறினால் அது பொருத்தமான கூற்றுத்தான். காற்று இல்லாமல் ஒரு மனிதனால் வாழமுடியாது. காற்று மிகவும் முக்கியமானது. அதுபோலவே சந்தோஷமான வாழ்வுக்கு நல்ல உறவு, தொடர்பு தேவை. எம்மை அன்பு செய்ய, உரிமை பாராட்ட, பாதுகாப்புணர்வைத்தர மற்றவர்கள் இருக்கும்போது எனக்கு மகிழ்ச்சி பொங்குகிறது.

பொதுவாக எமது வாழ்வில் உறவு விலகும்போது, முறியும்போது கவலை ஏற்படுகின்றது. புதிதாக உறவு வளரும்போது, உறவு ஆழமாகும் பொழுது மனதில் மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை. குடும்ப வாழ்வில் ஆழமான அன்புறவை ஏற்படுத்த உள்ளத் திறமைகள் மிகவும் முக்கியமானவை. நல்ல உறவை ஏற்படுத்துவது எப்படி? என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதுமட்டும் போதாது அதற்காக எம்மை அர்ப்பணிக்கவும் வேண்டும்.

ஆகவே முதலில் இறைவனோடு நல்ல உறவை ஏற்படுத்துவோம். அதேபோல் என்னோடு நான் நல்ல உறவை ஏற்படுத்த வேண்டும். மற்றவர்களோடும் நல்ல உறவை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும். சிந்திப்போம் செயற்படுவோம்.

தொடரும்....

# விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

### கத்தோலிக்கரின் இரு விவிலியங்கள்

கத்தோலிக்க மக்களுக்கு, நூலாகத் தொகுக்கப்பட்டதும் நூலாகத் தொகுக்கப்படாததும் என இரு விவிலியங்கள் இருக்கின்றன. நூலாகத் தொகுக்கப்பட்ட விவிலியம் 73 நூல்களைக் கொண்ட ஒரு தனி நூலாகவும்,நூலாகத் தொகுக்கப்படாத விவிலியம் பாரம்பரியங்கள் ஒன்றிணைந்த ஒரு தொகுப்பாகவும் இருக்கின்றன. கத்தோலிக்க திருச்சபையின் தன்மையும், வாழ்வும் இந்த இரு விவிலியங்களிலும் இருந்தே புறப்படுகின்றன. நூலாக்கப்பட்ட திருவிவிலிய நூலைமட்டும் ஆதாரமாகக் கொண்டு கத்தோலிக்க திருச்சபையை மதிப்பீடு செய்ய முடியாது.

திருவிவிலியத்தில் குறிப்பிடப்படாத எத்தனையோ விடயங்களைக் கத்தோலிக்க திருச்சபை தன்னிலே கொண்டுள்ளது. திருமரபிலே காணக்கிடக்கின்றன. மேலும் திருவிவிலிய நூல் கத்தோலிக்க திருச்சபை எப்படி வாழவேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட ஒரு சட்டநூல் அல்ல. திருவிவிலியத்தை ஒரு சட்ட நூலாகக் கணிப்பது மிகத்தவறான பார்வை. இது மனிதரின் விண்ணக வாழ்வுக்காகத் தூய ஆவியாரால் வரைந்து கொடுக்கப்பட்ட மீட்பின் செய்தி நூல் என்றே கொள்ள வேண்டும். இச்செய்தி நூலில் காணப்படும் செய், செய்யாதே என்ற பகுதிகளால் இது ஒரு சட்ட நூலாக மாறுவதில்லை.

### கத்தோலிக்கரும் திருவிவிலியமும்.

திருவிவிலியம் 73 நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்பு. இதில் 46 பழைய ஏற்பாட்டு நூல்களும் 26 புதிய ஏற்பாட்டு நூல்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. தொடக்கத்தில் வாய் மொழியாக இருந்து வந்த இறைவார்த்தை பின்னிட்ட காலங்களிலேயே எழுத்துவடிவம் பெற்றது. இத்தனை நூல்களும் எழுதப்பட ஏறத்தாழ 1500 ஆண்டுகள் எடுத்தன. பழைய ஏற்பாட்டின் அநேக நூல்கள் எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாட்டு நூல்கள் கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டன. இவற்றைத் தூய ஆவியாரின் தூண்டுதலால் அநேக மனித ஆசிரியர்கள் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு இலக்கிய அமைப்புகளில் எழுதினார்கள். இதனால் திருவிவிலியம் தூய ஆவியாரைத் தன் முதல் ஆசிரியராகவும், மனித ஆசிரியர்களைத் தன் துணை ஆசிரியர்களாகவும் கொண்டிருக்கிறது.

திருவிவிலியத்தின் ஒரு குறிப்பிட்ட நூலை வாசிக்கும் முன் அந்த நூலை யார், எதை, எப்போது எங்கே, எந்தச் சூழலில், யாருக்கு, எப்படி எழுதினார் என்ற பல வினாக்களை எழுப்ப வேண்டும். இவ்வினாக்களுக்கு விடைகளைக் கண்டுபிடித்து, இவற்றின் வெளிச்சத்தில் இறைவார்த்தையை விளங்கிக் கொள்வதே திருவிவிலியத்தைப் படிக்கும் கத்தோலிக்கரின் முறை. மாறாக சொல்லுக்குச் சொல் நேரடிப் பொருள் கொண்டு அதை விளக்குவது திருவிவிலியத்தைப் பற்றிய அறியாமையையே எடுத்துக் காட்டுகிறது. பைபிள்காரர்கள் தூய ஆவியார் தங்களிடம் வந்துவிட்டதால் தங்களுக்கு பைபிள் தெரியும் என்று சொல்லிக் கொள்கின்றார்கள். சொல்லுக்குச் சொல் பொருள் கொண்டு விவிலியத்தைப் படிப்பதே இவர்கள் தெரிந்து வைத்திருக்கும் விவிலியம். தடி எடுத்தவன் வேட்டைக்காரன், என்பதைப்போல் இப்போது பைபிளைத் தூக்கியவர்கள் எல்லோரும் போதகர்கள் ஆகிவிட்டார்கள். இவ்வாறான தப்பறைக்குள் கத்தோலிக்கர் விழுந்துவிடாது தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

திருவிவிலியம் கத்தோலிக்க திருச்சபையின் சொத்தாக இருப்பதால் திருச்சபையின் போதிக்கும் அதிகாரம் மட்டுமே அதற்குச் சரியான பொருளையும், விளக்கத்தையும் கொடுக்கமுடியும் கத்தோலிக்க போதகர்கள் கூடத் தாங்கள் விரும்பியவாறு விவிலியத்தைப் போதிக்க முடியாது. இவர்கள் திருச்சபையின் வழிகாட்டலுக்கு ஏற்றவாறே போதிக்கலாம். பைபிள்காரரோ எதையும், எப்படியும் தாங்கள் விரும்பியவாறு போதிப்பார்கள். அவர்களைத் தடுக்கவோ அல்லது நெறிப்படுத்தவோ எவரும் இல்லை. இதனால் இவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாகாது.

அருட்பணி. பிலிப் I.V. Dei

தொடரும்....

# பொதுக்காலத்தின் 25 ஆம் ஞாயிறு - 22.09.2013




**வாசக விளக்கம்:**

இன்றைய முதல் வாசகத்தால் சமுதாயத் தீமைகளைச் சுட்டிக்காட்டும் ஆமோஸ் இறைவாக்கினர். இந்தச் சமுதாயச் சூழல் சீர்கெட்டுப் போய்விட்டது. "வேலியே பயிரை மேய்கின்றதே" என்ற உள்ளக் குமுறல்களை வெளியில் கொட்டித் தீர்க்கின்றார். பெரும் பணக்கார முதலைகளினால்தான் சமுதாயத்தில் ஊழல் பெருகியது, சிலை வழிபாடும் கொண்டுவரப்பட்டது என்றும் குறிப்பிடுகிறார். தன்னுடைய அனுபவத்தையே மனதில் கொண்டு எழுதும் தூய பவுல் அடியார் எப்படி செபிக்க வேண்டும்? யாருக்காக செபிக்க வேண்டும்? ஏன் செபிக்க வேண்டும்? எனக் கேட்டு உயர் பதவியில் இருப்போருக்காக, ஏழைகளுக்காக, அனாதைகளுக்காக, கைவிடப்பட்டோருக்காக பணம் படைத்தவர்களுக்காக செபிக்க வேண்டும். ஏனெனில் செபத்தினால் அனைவரும் இறைவன் பக்கம் திரும்ப வேண்டும் எனக் கூறுவதை இரண்டாம் வாசகத்தில் காணுகின்றோம். கடவுளுக்கு நேர்மையுள்ளவர்களாக வாழ இன்றைய நற்செய்தி அழைப்பு விடுக்கின்றது. உவமையில் வரும் நேர்மையற்ற மேற்பார்வையாளர் உழைக்காமல் உண்ண விரும்புகிறார். இவ்வாறானவர்களை "இருளின் மக்கள்" என்றே ஆண்டவர் குறிப்பிடுகின்றார். நாம் ஒளியின் மக்களாக வாழ நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அநீதியை கைவிட்டுவிட்டு நீதிநேர்மையோடு எமது பொறுப்புக்களை ஏற்று வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** ஆமோஸ் 8:4-7

வெள்ளிக் காசுக்கு ஏழைகளையும், இரு காலணிக்கு வறியோரையும் வாங்கலாம்?

**பதிலுரைப்பாடல்:** ஏழைகளைத் தூக்கி விடும் ஆண்டவரைப் போற்றுங்கள்.

**இரண்டாம் வாசகம் :** திமோ 2:1-8

எல்லா மனிதரும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென கடவுள் விரும்புகிறார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செல்வராயிருந்தும் அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு உங்களுக்காக ஏழையானார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக்கா 16:1-13

## விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

கடவுளுக்கு நேர்மையுள்ளவர்களாக வாழ அனைவ-ருக்கும் வழிகாட்டும் தூய திருச்சபைக்காகவும், அதன் தலைவரான பாப்பரசர், மேற்றாணிமார், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்காகவும் சமூகத்தின் சீர்கேடுகளை அகற்ற உழைக்கும் அனைவருக்காகவும் உமது திருவருளைப் பொழிந்தருள வேண்டுமென்று...

இயேசு சக்கேயு, மத்தேயு, நூற்றுவர் தலைவன் போன்றவர்களை மன்னித்தது போல எமது நாட்டின் செல்வங்களை சுரண்டும் தனவந்தர்களை நாமும் மன்னித்து ஏற்றுக்கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவும், ஏழைகள் எமது வாழ்வின் சொத்துக்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை புரியவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

நாம் நமது பொறுப்புக்களையும் கடமைகளையும், சரிவரச் செய்தால் கடவுள் நமக்கு மேலும் ஆசீர்வாத-ங்களைத் தருவார் என்பதை உணர்ந்து கடவுளுக்கு நேர்மையுள்ளவர்களாக நாம் வாழவும் எமது செபங்களும் செயற்பாடுகளும் கடவுளுக்கு ஏற்றவகையாக மாறவும் சமுதாயத்தில் காணப்படும் தீமைகளை ஒழித்திட எமது பங்களிப்பை செலுத்தி வாழவும் தேவையான தூய உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று...

# பொதுக்காலத்தின் 26 ஆம் ஞாயிறு - 29.09.2013

## [ தேசிய மறைக்கல்வி தினம் ]

**வாசக விளக்கம்:**

இஸ்ராயேலில் வாழ்ந்த செல்வந்தர்கள் ஏழைகளை அடிமைப்படுத்தியும் அவர்களிடம் இருந்த செல்வங்களை ஏமாற்றிப் பறித்தும் வாழ்ந்து வந்தனர். இதைக் கண்ணுற்ற நீதியின் இறைவாக்கினர் ஆமோஸ் அவர்களது குற்றங்களை சுட்டிக்காட்டி மனம் மாறச் சொன்னபோதும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இதனால் ஆமோஸ் அவர்களைப் பார்த்து "நாட்கள் வரும் அப்பொழுது நீங்கள் தான் முதலில் நாடுகடத்தப்படுவீர்கள்" என்றார். அவ்வாறே அசீரிய மன்னன் செய்தான். இதை இன்றைய முதல் வாசகம் விளக்குகின்றது. உரோமைச் சிறையில் இருந்த பவுல் அடியார் தனது நண்பர் திமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தை இன்றைய இரண்டாம் வாசகத்தில் பார்க்கின்றோம். துன்பங்கள் மத்தியிலும், குழப்பங்கள் மத்தியிலும் எப்படி ஒரு நல்ல ஆயனாக இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறுகின்றார். விசுவாசம் என்னும் போராட்டத்தில் ஈடுபடும் போதுதான் நிலைவாழ்வை உறுதியாகப் பற்றிக்கொள்ள முடியும் என்றும் விளக்குகின்றார். இன்றைய நற்செய்தியில் வரும் உவமையின் வாயிலாக இயேசு பணத்தின் மீது நம்பிக்கை வைக்கும் மனிதர்கள் இறந்தபின் எத்தகைய நிலையை அடைவார்கள் என்பதை படம் பிடித்துக் காட்டுகிறார். ஏழை என்பதால் லாசர் விண்ணகம் சேரவில்லை. ஏழ்மையிலும் கடவுளை இறுகப் பற்றிக் கொண்டதால் தான் விண்ணகம் அடைந்தார். எனவே நாமும் ஏழைகள் மீது இரக்கம் காட்டி வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** ஆமோஸ் 6:1,3-7

கிடையிலிருந்து வரும் ஆட்டுக்குட்டிகளையும், மந்தையி-லிருந்து வரும் கொழுத்த கன்றுகளையும் உண்போருக்கு ஐயோ கேடு!

**பதிலுரைப்பாடல் :** நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்று.

**இரண்டாம் வாசகம் :** திமோ 6:11-16

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தோன்றும் வரையில் கட்டளையை அப்பழுக்கின்றி கடைப்பிடித்து வா

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செல்வராயிருந்தும் அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு உங்களுக்காக ஏழையானார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக்கா 16:19-31

## விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

ஏழை எளியோரை அரவணைத்து அன்பு செய்து ஏற்றத்தாழ்வுகள் இல்லாத புதியதொரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அயராது உழைத்துவரும் திருச்சபையையும் அதன் தலைவரான பாப்பரசர், மேற்றாணிமார், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும் வேண்டிய வரங்களை இவர்கள்மேல் பொழிந்தருள வேண்டுமென்று...

செல்வச் செருக்கினால் தாழ்வு வந்துவிடாது என்பதை உணர்ந்து எமது நாட்டின் செல்வங்களை சமமாக பகிர்வதில் ஏற்றத்தாழ்வுகள் பாராமல் பகிர்வு வாழ்வில் மக்களைப் பழக்கப்படுத்தி எமது நாட்டின் தலைவர்களும், பணம் படைத்தவர்களும், மக்களுக்கான பணிகளை பொறுப்புடன் செய்திடத் தேவையான அருட்கொடைகளை தந்தருள வேண்டுமென்று...

விண்ணுலகில் ஆண்டவர் அருகில் அமர மண்ணுலகில் ஏழைகளின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்பதை உணரவும் அயலானை அன்னியனாகப் பார்க்காமல் அகிலத்தைப் படைத்த ஆண்டவனின் பிள்ளையாகப் பார்க்கவும், இரக்க குணம் கொண்டவர்களாக ஏழைகளுக்கு உணவளிக்கவும், உதவி செய்யவும் வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

# மணமுறிவு இறையாட்சியால் தடைசெய்யப்பட்டுள்ளது

அருட்பணி. பிலிப் IV.Dei

மனிதர்களை மட்டும் சாட்சிகளாகக் கொண்டு அவர்கள் முன்னிலையில் திருமணம் செய்துகொள்ளும் ஆணும் பெண்ணும் சில காரணங்களை முன்வைத்து நீதிமன்றத்தில் சட்டப்படியாகத் தங்கள் மண ஒப்புதலை முறித்துக் கொள்கிறார்கள். இதை மண முறிவு என்று சொல்கிறோம். ஆனால் கத்தோலிக்கரிடையே நடைபெறும் திருமணங்கள் அப்படியல்ல. அவை வானகத் தந்தையின் முன்னிலையில் அவரே முதற்சாட்சியாக இருக்க அவர் முன்னிலையில் மனிதர்களைச் சாட்சிகளாகக் கொண்டு இடம்பெறுகின்றது.

வானகத் தந்தையே இத்திருமணங்களை முத்திரையிடுவதால் இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்கக் கூடாது என்ற நிலை ஏற்படுகிறது. இத்திருமண இணைப்பு இறையாட்சிக்கு உரியதாய் இருப்பதால் இது ஓர் அருட்சாதனமாய் இறக்கும்வரை நீடிக்கிறது. இதனால் கத்தோலிக்க திருமணங்களில் மணமுறிவு இறையாட்சியால் தடைசெய்யப்பட்டுள்ளது. திருமண வாழ்வில் முதலில் மனமுறிவும் பின்னர் மணமுறிவும் உண்டாக இடம் கொடுக்கக் கூடாது என்று இயேசு அறிவுறுத்துகிறார். அத்தோடு திருமண முறிவுக்கு இடம்கொடுத்தால் அது ஒருவரை அல்லது இருவரையுமே விபச்சாரத்தில் கொண்டுபோய் சேர்த்துவிடும் என்று அவர் எச்சரித்துள்ளார். பரத்தமைக்கூட மணமுறிவுக்குக் காரணமாய் இருக்கமுடியாது (மத் 5:31-32)



**"வானகத் தந்தையே இத்திருமணங்களை முத்திரையிடுவதால் இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்கக் கூடாது"**

# சிந்தனைக்கு

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | : | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | : | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | : | தவறு |
| மிகப்பெரிய தேவை | : | சமயயோகித புத்தி |
| மிகக் கொடிய நோய் | : | பேராசை |
| மிகவும் சுலபமானது | : | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | : | பொறாமை |
| நம்பக் கூடாதது | : | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | : | அதிகப் பேச்சு |
| செய்யக் கூடாதது | : | நம்பிக்கை துரோகம் |
| செய்யக் கூடியது | : | உதவி |
| விலக்க வேண்டியது | : | விவாதம் |
| உயர்வுக்கு வழி | : | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | : | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | : | நட்பு |
| மறக்கக் கூடாதது | : | நன்றி |

# தேசிய மறைக்கல்

## நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்புவதன் மூலம் மறை வாழ்வைக் கட்டியெழுப்புவோம்

மேதகு ஆயர். ஜோசப் பொன்னையா
தேசிய ஆணைக்குழு உபதலைவர்,
கத்தோலிக்க கல்வி, மறைக்கல்வி விவிலியப்பணி.



புனித பவுல் கொலோசேய நகர் திருச்சபைக்கு எழுதுகையில், "நீங்கள் முழு ஞானத்தையும் பெற்றுக் கடவுளின் திருவுளத்தைப் பற்றிய அறிவை நிறைவாக அடைய வேண்டும்.... நீங்கள் பயன்தரும் நற்செயல்கள் அனைத்தையும் செய்து கடவுளைப் பற்றிய அறிவில் வளரவேண்டும்" (கொலே 1:9-10) என அவர்களின் நம்பிக்கை அறிவு வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையைக் காண்கின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் திருமுழுக்கின்போது பெற்றுக் கொண்ட நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்புவதாயின் நம்பிக்கை ஆழப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இந்த ஆண்டினை நம்பிக்கை ஆண்டாகப் பிரகடனப்படுத்திய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் வேண்டுகோள் விடுத்தார்.

தம்மையே வெளிப்படுத்தும் கடவுளின் முன் முயற்சிக்கு மனிதர் அளிக்கும் தனிப்பட்ட பதில் நம்பிக்கையாகும். நம்பிக்கை மனிதருக்கு இறைவன் தந்த இலவசக் கொடை. நம்பிக்கை கடவுளின் அழைப்புக்கு மனிதர் கொடுக்கும் முதல் பதில் மொழியாகும். திருமுழுக்கின் போது எமது பெற்றோரும், ஞானப்பெற்றோரும் எமக்காக நம்பிக்கை அறிக்கை செய்தனர். இயேசுக்கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று அவருக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்வதே நம்பிக்கை வாழ்வாகும். அதாவது கிறிஸ்துவோடு தொடர்ந்து உடன் நடப்பதையும், பிறரோடு ஒன்றிணைந்து உறவாடி வாழ்வதையும் நம்பிக்கை வாழ்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எங்கும் எல்லோர்க்கும் மறைக்கல்வி அளிக்கப்பட வேண்டும் என சர்வதேச மறைக்கல்வி தினத்திலே திருச்சபை அறைகூவல் விடுக்கின்றது. கிறிஸ்தவர்கள் எல்லோரும் தங்கள் மறைபற்றிய தெளிவை பெற்றிருக்கிறார்களா என்பது கேள்விக்குறி. அதே சமயத்தில் சவால்கள் மிகுந்தும், சரியாகப் புரிந்து கொள்வதில் சிரமம் உள்ளதுமான மறைக்கல்விப் பணி சிறப்பாக ஆற்றப்படுகின்றதா என்பதும் எம்முன் எழுந்திருக்கும் முக்கிய வினா ஆகும். நம்பிக்கை விதைகள் ஒழுங்காக விதைக்கப்பட்டிருக்கின்றதா? ஒவ்வொரு பருவத்திற்கும் (மழலையர், சிறார்கள், இளைளோர், வளர்ந்தோர், முதியோர்) ஏற்ற விதத்தில் நம்பிக்கை வாழ்வு கட்டியெழுப்பப்படுகின்றதா? என்பதையும் அவதானிக்க வேண்டும். அதாவது வரப்பும் நீரும் உயர்ந்தால்தான் நெல் உயர வாய்ப்புண்டு. அதேபோன்று நம்பிக்கை வாழ்வு தொடக்க நிலையிலிருந்து, அடிமட்டம் வரை ஆழமாகப் போடப்பட வேண்டும். அப்போதுதான் அது உறுதியாக கட்டியெழுப்பப்படும்.

உலக வாழ்விலும், மறைவாழ்விலும் குழந்தைகளின் நம்பிக்கையை வளர்ப்பது மறைக்கல்வி. இறையாட்சியே கிறிஸ்தவர்களின் இலக்காகக் கொண்டுள்ள போது, நமது மறைக்கல்விப்பணி இதனை வாழ்ந்து காட்ட, வழிகாட்ட வேண்டும். நம்பிக்கையின் வழியாக ஒவ்வொருவரும் சுதந்திரத்துடன் இறைவனுக்கு தம்மையே அர்ப்பணிக்க முன்வர வேண்டும். பிறப்பிலிருந்து இறப்பு வரையுள்ள பல்வேறு "நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப" சாட்சியாக வாழ அழைக்கப்படுகின்றோம்.

மீட்பளிக்கும் இறைவார்த்தை நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் நம்பிக்கை ஊட்டுகின்றது. இந்த நம்பிக்கையால்தான் கிறிஸ்தவ சமூகம் தொடங்குகிறது வளர்கிறது. (க.தி.ம எண் 1102). திருச்சபையின் நம்பிக்கையில் தான் நம்பிக்கையாளர்கள் தங்கள் நம்பிக்கையில் வளர்கின்றார்கள்.

திருமுழுக்கிற்கான நம்பிக்கை வளர்ந்து முழுமை பெறவேண்டும். (க.தி.ம எண் 1253). நம்பிக்கையாலும், திருமுழுக்காலும் இயேசுவைச் சார்ந்த அனைவரும் தங்கள் நம்பிக்கையை மனிதர்முன் அறிக்கையிட வேண்டும் (க.தி.ம எண் 14).

"எனவே இனி வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்" (கலா 2:20) என உறுதியுடனும், நம்பிக்கையுடனும் சான்று பகரும் பவுலைப்போன்று, சான்று பகர்வதால் மறைவாழ்வைக் கட்டியெழுப்ப முடியம். மறைக்கல்வி ஆசிரியர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு நம்பிக்கையாளரும் மற்றவரில் கிறிஸ்து உருவாகும்வரை பவுலைப் போன்று "உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகின்றேன்" (கலா 4:19) என கடினமாக உழைக்க வேண்டும். இந்தப் பூமியில் வந்து போவோர் எல்லோரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டு அவரின் இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்குபெறும் போது மட்டுமே அவரின் வரலாற்றோடும் இணைந்து பலருக்கும் வழிகாட்டும் புனிதர்கள் ஆகிறார்கள்.

நாமும் புனித வாழ்வு வாழ வேண்டுமாயின் கிறிஸ்துவின் இறப்பிலும், உயிர்பிலும் தொடர்ந்து பங்கு கொள்ளவேண்டும். ஆயிரமாயிரம் துன்பங்களும் இடர்பாடுகளும் நம்மை நெருக்கி, நமது கனவுகளைச் சிதறடித்து, அவநம்பிக்கை உலகில் எம்மை ஆழ்த்தும்போது இயேசுவின் உயிர்ப்பு அனைத்தையும் உயிர்ப்பிக்கும் உயிர்மூச்சாகட்டும். நம்பிக்கையைத் தரும் ஊற்றாகட்டும். இந்த உயிர்ப்பு அனுபவந்தான் எமது மறைவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும்.

இயேசுவின் இன்றைய சீடர்கள் நாம் அவரை இறந்தவர்களிடையே தேடாமல், வாழ்வோரிடையேயும், வாழத்துடிப்-போரிடையேயும், வாழ் இழந்தோரிடையேயும் அவரைத் தேடவேண்டும், காணவேண்டும். கலிலேயாவில் அவர் ஆற்றிய இறையாட்சிப் பணியை நம் காலத்தில் தொடரவேண்டும். இறைவார்த்தையை எடுத்துரைப்பதும், நலம் குன்றியோரைக் குணப்படுத்துவதும், நலிந்தோருக்கு நல்வாழ்வு தருவதுமாகிய பணிகள் உயிர்த்த இயேசுவின் பணிகளே, அவர் விரும்பிய புதிய வானகமும், புதிய பூமியும் உருவாக்கும் இறையாட்சிப் பணிகளில் உயிர்த்த ஆண்டவரே உடனிருக்கிறார். வழிநடத்துகிறார்.

உயிர்த்த இயேசுவில் சீடர்கள் கொண்ட அனுபவத்தால் ஆழப்பட்ட நம்பிக்கையே துணிவாக இயேசுவைப்பற்றி சான்று பகர துணிவு தந்தது. எனவே நம்பிக்கையினால் மறைவாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

## "அறிவிப்பதைக் கேட்



புரட்டாதி மாதம் 29ஆம் நாள் தேசிய மறைக்கல்வி தினமாகும். மறைக்கல்வியானது திருச்சபை வரலாற்றில் முக்கிய இடம் வகிப்பதை நாம் அறிவோம். கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிப்பது, மறையை அளிப்பது மறைக்கல்வியாகும். இவ்வாறு கிறிஸ்தவ நம்பிக்கையை மற்றவர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் நோக்கமாக பலவித பணிகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

பிள்ளைகளைப் போலவே வளர்ந்தோருக்கும் அவர்களின் நம்பிக்கையை மேலும் வலிமைப்படுத்தும் விதத்தில் மறைக்கல்வி நிகழ்வுகள் செயற்பட வேண்டும். கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிராக பல சவால்கள் தோன்றுகின்ற இக்கால கட்டத்தில் சவால்களினால் மனம் தளராது நம்பிக்கைக்கு மேலும் சான்று பகர்ந்து வாழ்வதற்கு துணைபுரியும் விதத்தில் மறைக்கல்வி அளிக்கப்பட வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வெளியிடப்பட்ட "நம்பிக்கையின் ஒளி" என்ற சுற்றுமடலிலிருந்து சில மேற்கோள்களை இங்கு காட்ட விரும்புகின்றேன். "கிறிஸ்துவின் அன்புக்கு நாம் திறந்த மனதுடன் இருக்கும்போது அவரிலுள்ள நம்பிக்கை எமக்கு மீட்பைத் தருகிறது. மேலும் அன்பு, உள்ளார்ந்த மாற்றத்திற்கு துணை புரிகிறது". (நம்பிக்கையின் ஒளி எண் 20) "அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால்தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு" (உரோ10:17)

துறவறத்தோர், குருக்கள் அனைவரும் இயலுமானவரை விசுவாசிகளின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்பட வேண்டியது அவர்களின் பொறுப்பாகவும், காலத்தின் தேவையாகவும் உள்ளது. இதுவே இன்றைய சவாலாகவும் உள்ளது. ஞாயிறு திருப்பலியில் குருவானவரின் மறை உரையானது,

## தேசிய மறைக்கல்வி நடு

## அருட்பணி. பியால் ஜானக்

29.09.2013 தேசிய மறைக்கல்வி தினமாகும். மறைக்கல்வி அளிப்பதற்காக - இறைவனை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்காக அழைக்கப்பட்ட மறையாசிரியரின் பணி ஓர் உன்னத பணியாகும். மகத்தான பணியாகும். இப்பணிக்கான அழைப்பு இறைவனால் தரப்படும் ஓர் உயரிய அழைப்பாகும்.

இவ்வழைப்பு ஒருவர் தகுதியுடையவர், தரத்தில் உயர்ந்தவர் அல்லது திறமை மிக்கவர் என்பதற்காக தரப்படுவது அல்ல. மாறாக இது இறைவனின் தெரிவு ஆகும். மறையாசிரியர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். வலுவற்றவர்களை வலுவுள்ளவர்களாக மாற்றும் ஆற்றல் வாய்ந்தது. இது இறை-பணியை நிறைவேற்றி முழுமையடையச் செய்வதற்கு இறைவனின் வல்லமையினால் ஊட்டமளிக்கும் மறைத்தூதுப் பணியாகும்.

இன்று இம்மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டிருப்போர் பலவித சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பொருளாதார பிரச்சினை, சமூக பிரச்சினை, குடும்பப்

பிரச்சின
பல த
கொடுக்
உறுதிய
அவசிய

இறையு
வர்கள
முடியா
மரத்திற
மேலும்

யை ஏ
கருவிய
மறையா
இதயங்
மறையா
பணியா
வாக அ
உங்கள்
அவரா
மறையா

# வி தினம் (29.09.2013)

## ...டால்தான் நம்பிக்கை உண்டாகும்".

### தேசிய மறைக்கல்வி தினத்தையொட்டி (29.09.2013) தேசிய கல்வி, மறைக்கல்வி, விவிலியபணி தலைவர் மேதகு துணை ஆயர் மெக்ஸ்வெல் சில்வா அவர்களின் வாழ்த்து செய்தி

(இறைவார்த்தையைப் பகிர்தல்) விசுவாசிகளின் நம்பிக்கையை மேலும் வளர்க்கும் விதத்திலும், அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதத்திலும் அமைய வேண்டியது அவசியம் ஆகும்.
தேசிய மறைக்கல்வி, அப்போஸ்தலிக்க பணியாக ஒழுங்கமைக்கப்பட்டு எம் நாட்டில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் மறைக்கல்வி கற்பிக்கப்படுவதில் எம் கவனத்தை செலுத்துவோம்.
"மறைப்பாடசாலையானது பிள்ளைகள், மறையாசிரியர், பெற்றோர் ஆகியோரின் பங்களிப்பினால் முழுமை பெறுகிறது. பிள்ளைகள், மறையினால் போஷிக்கப்பட வேண்டிய இலக்காக இருப்பதோடு அவர்களுக்கு கற்பிக்கும் பணியில் மறையாசிரியர் ஈடுபடுகின்றனர். இதிலே பிள்ளைகள் பயன்பெற வேண்டுமாயின் பெற்றோர் மறையாசிரியருடன் இணைந்து பங்காற்ற வேண்டும். இது பெற்றோரின் கடமையுமாகும். பாடசாலைக் கல்வியில் அக்கறை கொள்வதுபோல மறைப்பாடசாலையில் பிள்ளைகளின் ஆன்மீகத்தை முன்னேற்றும் பொறுப்புடன் மறையாசிரியர் செயற்பட வேண்டும். மறையாசிரியர் தமது வாழ்க்கை முன்மாதிரிகையினால் பிள்ளைகளின் ஆன்மீகத்தை வலிமைப்படுத்த வேண்டிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவதாயின் மறைப்பாடசாலையில் இருக்க வேண்டிய நற்பண்புகளைப் பாதுகாக்கலாம்.
ஆகவே இவ்வாறு செயற்படுவதற்கு பெற்றோரின் பங்களிப்பும் அவசியமாகியது. அவர்கள் ஆசிரியருடன் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் பணியாற்ற வேண்டும். பாடசாலையில் கிடைக்காததை மறைப்பாடசாலை வழியாக பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பிள்ளைகளை மறைப்பாடசாலைக்கு அனுப்பக் கூடாது. மேலும் "மறைக்கல்வி முறைகள்" தொடர்பாக புதிதாக சிந்தித்துப் பார்க்க வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது. இது பயனுள்ளதாக அமையும்.

ஆகவே இது தொடர்பாக சிந்தித்துப் பார்ப்பதற்கு தேசிய மறைக்கல்வி தினத்தின் மூலம் உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

**இறை ஆசீர்**
**மேதகு ஆயர் மெக்ஸ்வெல் சில்வா**
**தலைவர் தேசிய கல்வி, மறைக்கல்வி, விவிலியப்பணி**
**தேசிய ஆணைக்குழு**

## ...நிலைய இயக்குனர் ...க அடிகளாரின் செய்தி



...ன, தனிப்பட்ட பிரச்சினை என ...ரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் ...கும் மறையாசிரியர், மனம் தளராது ...டன் பணியாற்ற வேண்டியது ...மாகும்.
... ஆன்மீகத்தில் - செபத்தினாலும், ...றவினாலும் வலிமைப் பெற்றுள்ள...ா இச்சவால்களால் ஒன்றும் செய்துவிட ...ு. மாறாக இத்தடைகளானது ...கு பசளையைப் போல் அவர்களுக்கு ... வலிமையை சேர்க்கிறது.
... இன்று எம் நாட்டில் அமைதி...ற்படுத்தும் பொறுப்பு - இறைவனின் ...ாக செயற்பட வேண்டிய கடமை ...சிரியரைச் சார்ந்ததாகும். புண்பட்ட ...களைப் பண்படுத்தும் பொறுப்பு ...சிரியர்களுக்கு உண்டு. மறை...ற்றும் உங்களை இறைவன் நிறை...சீர்வதிக்கிறார். உங்களை மட்டுமன்று ... பிள்ளைகள், குடும்பங்களும் ... ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். உன்னத ...சிரியரான இயேசுவை எமது வாழ்க்கை மாதிரிகையாகக் கொள்வோம். அவரே எமது ஆரம்பமும் முடிவும் அடிப்படையுமாயிருக்கிறார்.

அன்பின் மறையாசிரியர்களே, மறைக்கல்வி தினமான இன்று உன்னத மறையாசிரியரான இயேசுவின் பெயரால் உங்களை வாழ்த்துகின்றேன். உங்கள் மறை பணியைத் தொடர்ந்தாற்ற உடல், உள வலிமையை எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக

**அருட்பணி பியால் ஜானக்க**
**தேசிய மறைக்கல்வி**
**இயக்குனர்.**

## மறைக்கல்வி ஞாயிறை ஒட்டிய சிறப்புக் கட்டுரை

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை**
*தேசிய மறைக்கல்வி நடுநிலையம், தமிழ்ப்பிரிவு பொறுப்பாளர்.*

கத்தோலிக்க திருச்சபையின் உயிர் நாடியாக இருப்பது மறைக்கல்வியாகும். இது திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் முக்கியமானதொரு இடத்தைக் கொண்டுள்ளது. இது ஒரு இறைவார்த்தைப் பணியாகும். திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் நம்பிக்கை வாழ்வில் ஆழப்படுத்தி உறுதிப்படுத்துகிறது. நம்பிக்கை வாழ்விலே முதிர்ச்சியைக் கொண்டு வருகிறது. மனித உயிர்கள் அனைத்துமே வளர்ச்சியை மையமாகக் கொண்டு செயற்படுகின்றன. கிறிஸ்தவ நம்பிக்கையும் வளர்ச்சியின் படிகளின் வழியாகவே முழுமையடைகிறது. நம்பிக்கை வாழ்வின் பயிற்சியானது பிறப்பு முதல் இறப்பு வரைத் தொடர்கிறது.

இன்று மறைக்கல்வியானது கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அவர்கள் தங்கள் வாழ்வில் தொடர் பயிற்சி பெறவும், வளரவும் வாழவும் உறுதுணையாக உள்ள ஒரு பயிற்சிப் பாசறையாக உருப்பெற்றுள்ளது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொ-ருவாிலும் கிறிஸ்துவைப் பதியச் செய்து அவர்கள் இன்னொரு கிறிஸ்துவாக வாழ வழிகாட்டுகிறது.

இது ஒரு இறைவார்த்தைப் பணியாதலால் இது கிறிஸ்தவ வாழ்வின் மையமும் நம்பிக்கையுமாகும். நம்பிக்கை என்பது கடவுளின் அன்பிற்கு பதில் மொழியாகும். மறைக்கல்வி நமது கிறிஸ்தவ ஒன்றியத்தை இந்த நம்பிக்கையில் உறுதி செய்து கட்டியெழுப்புகிறது.

மறைக்கல்வி என்பது திருச்சபையின் செயற்பாட்டையும், திருச்சபை சமூகத்தின் உறுப்பினர்களின் வாழ்வில் முதிர்ச்சி பெறுவதையும் குறிக்கிறது. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலில் **"மறைக்கல்வி என்பது நம்பிக்கையின் போதனையாகும். சிறுவர்களுக்கும், முதிர் வயதினருக்கும் சிறப்பாக கிறிஸ்தவ கோட்பாடுகளையும் – பொதுவாக முறையாக மற்றும் தெளிவாகக் கற்று கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு அழைத்துச் செல்லும் நோக்கோடு கொடுக்கப்படுவதாகும்"** என விவரிக்கப்படுகிறது.

நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சி - முதிர்ச்சி என்பது இயேசுவாக மாறுதலாகும். ஆகவே நம்பிக்கை வாழ்வின் முதிர்ச்சிக்கும், உலக வாழ்வில் சாட்சியம் பகர்வத்கும் மறைக்கல்வி உதவுகிறது. இது கடவுளின் திருமகன் கிறிஸ்துவில் கிறிஸ்தவர்கள் அனைவரும் நம்பிக்கையிலும், ஞானத்திலும் இணைந்து வாழ உதவுகிறது.

மறைக்கல்வி என்பதன் கிரேக்க மூலச் சொல், **"கத்தேகேஸிஸ்"** ஆகும்.



கத்தேகேஸிஸ் என்பதன் அடிப்படையில் மறைக்கல்வி என்பது **"அறிவித்தல், அறிவுறுத்தல், விளக்கமாகக் கற்றுக் கொடுத்தல்"** என்று பொருள் கொள்ளலாம். புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் மறைக்கல்வியை **"வாய்மொழி போதனை"**யாகக் காண்கின்றோம்.

***உதாரணம்***
லூக் 1:4, திப 18:25, உரோ 2:18, 1கொரி 14:19, கலா 6:6

விவிலியத்தில் வேறு சில பொதுவான சொற்கள் காணப்படுகின்றன. **"தீதாகெய்ன்"** அல்லது **"தீதாகே"** தீதாகே என்பது போதித்தல், தீதாகெய்ன் என்பது இயேசுவின் போதனையைக் குறிக்கிறது. கிரேக்க மரபிலே தீதாகெய்ன் என்பது மெய்யியலாளர்களின் அதிகாரபூர்வ போதனையை அளிப்பதாகும்.
தூய பவுல் அடிகளார் இயேசுவின் போதனைக்கும் திருத்தூதர்களின் போதனைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறிக்க **"காதெகெய்ன்"** என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அதாவது ஆண்டவர் இயேசுவின் போதனையைத் திருத்தூதர்கள் அறிவிப்பதாகும்.

ஆகவே மறைக்கல்வி வாழ்க்கையை நம்பிக்கைக்கும் நம்பிக்கையை வாழ்க்கைக்கும் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்திற்கும் ஊற்றதாகத் திகழும் இறைவார்த்தையின் அடிப்படையில் உருவாகும் மறைக்கல்வி இயேசுவிக்பால் அனைவரையும் இட்டுச் செல்வதால் மறைக்கல்வி என்பது **"இயேசுவுக்கு சாட்சியவாழ்வு வாழும் ஒருங்கிணைந்த முழு நேர பயிற்சியாகும்"** திருச்சபையின் மிக முக்கிய மறைக்கல்வி ஆவணங்களான மறைக்கல்வி பொது வழிகாட்டி (GDC), இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் (CT) மற்றும் கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் (CCC) ஆகியன மறைக்கல்வியின் தேவையை எல்லோருக்கும் வலியுறுத்துகின்றன.

**"உலகொங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்"** என்ற இயேசுவின் வார்த்தைகளை சிரமேற் கொண்டு போதனையால் மட்டுமன்றி சாதனையாலும் வாழ்க்கைச் சான்றினாலும் மறையை வளர்ப்போம் மறைக்கல்வி பணியில் பங்குதாரராவோம்.

# புனித பிரான்சிஸ் அசிசி 08

விரைவில் பொன்னாந்து தன் செல்வத்தை எல்லாம் எளியவர்களுக்கு அளித்துவிட்டான் என்பதை அந்நகர மக்கள் கேள்விப்பட்டனர். திறமையும் அறிவும் உள்ள மற்றொரு இளைஞன் பிரான்சிசுடன் இணைந்தான். ஒரு வாரத்திற்கு பிறகு ஜில்லஸ் என்ற வாலிபன் பிரான்சிசுடன் சேர்ந்தான். விரைவில் பிரான்சிஸின் குழு பன்னிரெண்டாக உயர்ந்தது.

பதினொருவரும் பிரான்சிசுடன் சேர்ந்து இறையரசைப் போதிக்கச் சென்றனர். பிரான்சிஸ் அவர்களைச் "சகோதரர்" என்று அழைத்தார். "பிரான்சிஸ் சொல்வது உண்மை. அதைக்கேட்டு அதன் வழி செயலாற்றுங்கள்" என்பதே சகோதரர் ஜில்லஸ் ஆற்றும் உரை. பின்னர் பிரான்சிஸ் அவர்களை இருவர் இருவராகப் போதிக்க அனுப்பினார். அவர்களை அனுப்பும் முன் புத்திமதிகள் பல கூறி "இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார், உங்களைப் பாதுகாப்பார்" என்று உரைத்தார்.

எல்லா இடங்களிலும் மக்கள் அவர்களை ஒரே விதமாய் ஏற்றுக் கொள்ளவில்லை. சில இடங்களில் அவர்களை நல்ல முறையில் ஏற்றுக் கொண்டார்கள். சில இடங்களில் அவர்களை பைத்தியம் என்று எள்ளி நகையாடினார்கள். சிலர் அவர்களைக் கண்டு அஞ்சி ஓடி மறைந்தனர். ஆனால் அவர்கள் மிகச் சாந்த குணத்தோடும், முகமலர்ச்சியோடும் இருந்தனர். இதைக் கண்ட குழந்தைகள் அவர்கள் உடையைப் பிடித்து இழுக்கவும், கல்லால் எறியவும் கூடத் தலைப்பட்டனர்.

ஆனால் சகோதரர் யாரும் கோபப்படவில்லை. முகமலர்ச்சியோடு இறைவனைப் பற்றிப் போதித்துக் கொண்டே சென்றனர். பிரான்சிஸ் கற்றுக் கொடுத்திருந்த அருமையான இனிய பாடல்களை வழியெல்லாம் பாடிச் சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தாலும் மிக மகிழ்ச்சியோடு இறைவனுக்கு நன்றிகூறி வந்தனர். பிறகு பிரான்சிஸ் அவர்களைக் கண்டபொழுது அவர்களைக் குகைகளுக்கு கூட்டிச் சென்றார்.

அக்குகைகளில் அவர்கள் தங்கள் நேரத்தை அதிகமாகச் செபத்தில் கழித்தனர். அவை அவர்களுக்கு மனச்சாந்தியோடு இறைவனுடன் ஒன்று பட ஏதுவாயிருந்தன. பிரான்சிஸ் தன் பாவங்களுக்காகக் கண்ணீர் சிந்தி, அதிக நேரம் செபிப்பது வழக்கம்.

**தொடரும்**

**கேள்வி எண் 08:**

1) **சகோதரர் ஜில்லஸ் ஆற்றும் உரை என்ன?**
2) **பிரான்சிஸ், அவர்களை இருவர் இருவராகப் போதிக்க அனுப்பும் போது என்ன கூறினார்?**

சிறுவர்களே உங்களது பதில்களையும், ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு - 08.

## அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 27.09.2013


**புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பொறுபவர்கள்.**

**விடைகள்**

1) பொன்னாந்து
2) "நீ என்னைப் பின்செல்ல விரும்பினால் உன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்செல்"

**பராட்டிற்குரியவர்கள்**

1) J.D. எண்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி)
2) அ. மதுமிகா, தரம் 7, நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு – 13
3) ஷாமினி சிமியோன், தரம் 7, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டி
4) அன்ரனி ரீனா, தரம் 6C, நாகஸ்வத்த வீதி, கிருளப்பனை, கொழும்பு –6
5) அரேத்தா விக்கோரியா, தரம் 7F, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு –4
6) G. ஜெரோம், தரம் 5, புனித பிரான்சிஸ் சவேரியார் மறைப்பாடசாலை, கெக்கிராவை, அநுராதபுரம்



## சிறுவர் பக்கம்



லெ. டிமோசனி. தரம் - 6.
புனித அந்திரேயார் பங்கு



N. யோசுவா றொட்றிக்கோ. தரம் - 2.
புதுக்கடைப்பங்கு

# அன்னை திரேசா

அன்னை தெரேசா இறையடி சேர்ந்த நாள் அது.
உலகமே உணர்ச்சிகரமான அமைதியை அனுபவித்தது.

கல்கத்தா தெருக்களில் எங்கு பார்த்தாலும் ஏழை, எளிய மக்கள் வெள்ளம் அணிவகுத்தது.

நேதாஜி அரங்கில் அவரது திருவுடல் இருந்தது. ஆதரவற்ற அவரது பிள்ளைகள் இறுதிப் பரிசுகளை அன்னையின் பாதத்தில் வைத்தனர்.

தாய் தந்தையற்ற பெண் ஒருத்தி மலர்வளையம் வைத்தாள்.

உடல் குறைவுள்ள பையன் ஒருவன் ரொட்டியைக் கொணர்ந்தான்.

சிறை மீண்ட பெண் ஒருத்தி நீரைக் கொண்டு வந்தாள்

இறுதியில், சபையின் புதிய தலைவியான சகோதரி நிர்மலா ஒரு பொருளைக் கையில் ஏந்தி வந்து அவரது பாதத்தில் வைத்தார்கள், கண்ணீரோடு.

அந்தப் பொருள் என்ன தெரியுமா? ஒரு காலிப் பாத்திரம்.

அது அன்னை அடிக்கடி உச்சரித்த சில வார்த்தைகளை நினைவுபடுத்தியது. அவற்றை வர்ணனையாளர்கள் அப்போது உலகிற்கே பறைசாற்றினார்கள்.

**'நாம் எப்போதும் நம்மையே ஒரு காலியான பாத்திரம் போல் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான்... ஆண்டவர் அதனை நிறைப்பார்..!'**

காசு பணம் காலாவதியாகிவிடும். கடவுளின் கருணையோ காலாவதியாகிவிடுவதில்லை, கடந்து நம்மோட வரும்.

1969ஆம் ஆண்டு ஆனி மாதம் 20ஆம் திகதி மனிதன் முதன் முதலாக சந்திரனில் கால் வைத்த நாள். எல்லோரும் அதை வெகு விமரிசையாக கொண்டாடினார்கள்.

அன்றைய தினம் அன்னை திரேசாவிடம் அவருடைய சக சகோதரி ஒருவர் "அம்மா நீங்களும் ஒரு நாள் சந்திரனில் கால் வைப்பீர்களா?" என்று ஆசையோடு கேட்டார். அதற்கு அன்னை சிரித்துக் கொண்டே "ஏன் மாட்டேன் அங்கேயும் ஏழைகள் இருந்தால் உங்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு அங்கே சேவை செய்யப் போய்விட மாட்டேனா?" என்று கூறினாராம்.

அன்பு என்ற மழையில் அகிலத்தையும் நனைய வைத்தவர் அன்னை திரேசா. அன்புக்காக தன்னையே அர்ப்பணித்தவர். அன்பு என்றால் என்ன என்று தெரியாத உள்ளங்களுக்கு அன்பை அனுபவிக்கக் கொடுத்தவர் அன்னை. அவரின் அன்பை அனுபவித்தவர்கள் இறைவனின் அன்பையே அனுபவித்தவர்கள் எனலாம்.

புரட்டாதி 5ஆம் திகதி அன்னையின் இறந்த தினத்தை நினைவு கூறுகின்றோம். இறைவனே உம்மிடம் கையேந்தி கேட்கின்றோம். எங்கள் அன்பு தகப்பனே இன்னொரு ஜென்மம் இருந்தால் இவ்வன்னையை மீண்டும் எமக்கு அளித்தருளும். தாயே எங்களுக்காக என்றும் இறைவனிடம் மன்றாடும் அம்மா













புரட்டாதி 5
அன்னையின் 16வது நினைவு தினம் ஆகும்.

## இறைவா எமது குடும்பங்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

இறைவனிடம் எமது குடும்பத்தை அர்ப்பணிக்க வேண்டும் ஏனென்றால்,

- ✝ அம்மா, அப்பா, சகோதரிகள், சகோதரர்கள் அனைவரும் குடும்பமாய் ஒன்றாக செபிக்க வேண்டும்.
- ✝ ஞாயிறு தின திருப்பலியில் குடும்பமாய் பங்குபற்றி திவ்விய நற்கருணையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ✝ தினமும் ஒரு முறையேனும் குடும்பமாய் உணவு உண்ணவேண்டும்

அப்பொழுது தான் குடும்பத்தில் சமாதானம், சந்தோஷம், மகிழ்ச்சி, விசுவாசம் ஆகியன ஆவியானவர் மூலம் இறைவன் எமக்கு அளித்திடுவார். தீய பழக்கங்களிலிருந்து நம்மை மீட்பார். எனவே எம் குடும்பத்தை இறைவனிடம் அர்ப்பணிப்போம்.

J.D. எண்ஜலினா தரம் - 6. சதா சகாய மாதா மறைப்பாடசாலை.
பரக்கடுவ (இரத்தினபுரி)

# உணர்வுகளை கையாண்டவர்



மனித உணர்வுகள் ஏராளம். உணர்வுகள் இல்லாத மனிதர் யாருமேயில்லை. எந்த நேரத்திலும் நாம் ஏதாவது ஓர் உணர்வின் தாக்கத்தில் தான் இருக்கின்றோம் என்கின்றனர் உளவியலாளர். நூற்றுக்கணக்கான உணர்வுகள் இருந்தாலும் **கோபம், வெறுப்பு, மகிழ்ச்சி, துயரம், விரக்தி, அச்சம்** முதலியன மட்டுமே முதன்மையான உணர்வுகள். இவையே மனிதரைத் தாக்கி, பல நேரங்களில் மனிதரின் வாழ்வையே திசை திருப்பிவிடுகின்றன.

உணர்வுகளை எப்படிக் கையாள்வது என்று சொல்லித் தருகின்றனர் வல்லுனர்கள். குறிப்பாக உணர்வுகளை அமுக்குவதோ, மறைப்பதோ கூடாது. மாறாக, அவற்றை நேரான, சீரான முறையில் வெளிப்படுத்த வேண்டும் என்கின்றனர்.

இயேசு தம் வாழ்வில் தமது உணர்வுகளை வெளிப்படுத்திய விதம், நமக்கு ஒரு பாடமாக அமைவது ஓர் உளவியல் வியப்பு! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறை உளவியலை எளிதாகச் சொல்லித் தந்த இணையற்ற வல்லுனர் இயேசு.

## 1. துயரம்

தாங்காத துயரத்தை வெளிப்படுத்த உதவுகிறது கண்ணீர். அழுது தீர்ப்பது துயரத்தை தணிக்க உதவும் என்பது நாம் அனைவரும் அறிந்த அனுபவப் பாடம். ஆனால் "ஆண்கள் அழக்கூடாது" என்று தடை போட்டிருக்கிறது நமது ஆணாதிக்கக் கலாச்சராம். இயேசுவோ இந்தத் தடையை தகர்த்து கண்ணீர் விட்டு அழுது, தன் துயரத்தை வெளிப்படுத்தினார். **தன் நண்பன் லாசர் இறந்தபோதும்** (யோவா 11:35), **எருசலேம் நகரை எண்ணி வருந்தியபோதும்** (லூக் 19:41), **தனத பாடுகளை எண்ணிக் கலங்கியபோதும்** (எபி 5:7) இயேசு கண்ணீர் விட்டு அழுதார் என்று விவிலியம் கூறுகிறது. அழுகை துயரத்திற்கோர் அருமருந்து என்று துயரத்தை வெளிப்படுத்தினார் இயேசு

## 2. விரக்தி

நம்பிக்கை அனைத்தும் இழந்து, விரக்தியின் பிடியில் சிக்கும் பலரும் தற்கொலையை நாடுகின்றனர். இயேசுவோ தமது பாடுகளையும், சாவையும் துணிவுடன் சந்தித்தார்.

நம்பிக்கை குன்றிய நிலையில் இயேசு செய்தது தந்தை இறைவனிடம் சரண் அடைந்தது. **"என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்"** (லூக் 22:42) என்ற வேண்டுதலும், சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது எழுப்பிய **"என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?"** (மத் 27:46) என்ற கதறலும் இயேசுவின் இறைப்பற்றை எண்பிக்கின்றன.


## 3. சினம்

ஆறுவது சினம் என்கிறது ஆத்திசூடி. சிலருக்கு கோபம் வந்தால் 'என்ன செய்கின்றோம்' என்கிற உணர்வே இல்லாமல், ஏடாகூடமாக ஏதாவது செய்து விடுவார்கள். பிறகு வருத்தப்படுவார்கள். இயேசுவுக்கும் கோபம் வந்த வேளைகள் உண்டு. நியாயமான கோபம் அது! அதனை அவர் சீரான வழியில் வெளிப்படுத்தினார்.

இயேசு ஓய்வுநாளில் குணமாக்குவாரா? என்று குற்றம் சுமத்தும் நோக்குடன் அவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த யூதர்களை பார்த்து இயேசு கோபம் கொண்டார். அவர் **"சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து"** (மாற் 3:5) அந்த மனிதரை நலப்படுத்தினார்.

எருசலேம் கோவிலை வாணிபக் கூடமாக்கிய விற்பவர்கள், வாங்குபவர்களைக் கண்ட இயேசு கோபம் கொண்டார். அனைவரையும் வெளியே துரத்தினார். நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும், புறா விற்போரின் இருக்கைகளையும், கவிழ்த்துப்போட்டார் (யோவா 2:15)

# மாணவர் பக்கம்



தொகுப்பு :
மறையாசிரியர் பேணடேற் சாந்தி

அது நியாயமான சினம்! **"உம் இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்"** என்ற மறை நூல் வாக்கை இயேசு நிறைவேற்றினார் என்கிறார் நற்செய்தியாளர் யோவான் (2:17) இயேசு யாருக்கும் துன்பம் இழைக்கவில்லை, காயப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 4. மகிழ்ச்சி

மகிழ்ச்சியை எப்படி வெளிப்படுத்தினார் இயேசு? இறைபுகழ் கூறி, நன்றி செலுத்தி! எழுபத்திரண்டு சீடர்களும் மகிழ்வுடன் திரும்பிவந்து, இயேசுவின் பெயரால் பேய்கள் கூடத் தங்களுக்கு அடிபணிந்தன (லூக் 10:17) என்று அறிக்கையிட்டபோது, இயேசு **"தூய ஆவியால் பேருவகை"** அடைந்தார். **"தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்"** (லூக் 10:21) என்று இறைவனுக்கு நன்றி கூறினார்.

## 5. பரிவு

இயேசுவுக்கு மென்மையான இதயம் இருந்தது. **"நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்"** (மத் 11:29) என்று அவரே கூறினார். எனவே, நோயாளர், வறுமையுற்றோர், தேவையில் உழல்வோரைக் கண்டபோதெல்லாம் இயேசு பரிவு கொண்டார்.

உள்ளத்தளவில் இந்தப் பரிவுணர்வு நின்றுவிடவில்லை. அதற்குச் செயல்வடிவம் கொடுத்து செயலாற்றினார் இயேசு. ஆயரில்லா ஆடுகள் போல் மக்கள் இருந்ததால், **"அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்"** (மாற் 6:34). **"நோய், நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார்"** (மத் 9:35-36) என்கிறார் நற்செய்தியாளர்.

பாவம் தவிர அனைத்திலும் நம்மைப்போல் வாழ்ந்த இயேசு, நாம் கொண்டிருக்கும் அனைத்து உணர்வுகளையும் அவரும் கொண்டிருந்தார். ஆனாலும் அந்த உணர்வுகளை நேரான, சீரான வழியில் தந்தை இறைவனைப் பெருமைப்படுத்தும் வகையில் வெளிப்படுத்தினார். நாமும் அவ்வாறே செய்வோம்!

# உலகின் மிகப் பெரிய தட்டையான உப்பு நிலப்பகுதி

10,582 சதுர கிலோ மீட்டர் அல்லது 4, 086 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ள Salar De Uyuni உப்பு நிலப்பகுதி, உலகின் மிகப்பெரிய தட்டையான உப்பு நிலப்பகுதியாகும். இது தென் அமெரிக்க நாடான பொலிவியாவின் தென்மேற்கு, ஆன்டெஸ்-மலை முகடுகளுக்கு அருகில், Potosi மற்றும் Oruro பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த உப்பு நிலப்பகுதி கடல் மட்டத்தைவிட 3,656 மீட்டர் அல்லது 11,995 அடி உயரத்தில் உள்ளது. இந்த Salar பகுதி முழுவதிலும் ஒரு மீட்டர் முதல் பல்வேறு அளவுகளில் உப்பு படிந்துள்ளது. இங்கு 50 முதல் 70 விழுக்காடு லித்தியம் கனிம வளம் நிரம்பியுள்ளது. உலகில் கிடைக்கும் லித்தியம் கனிமத்தில் 43 விழுக்காட்டை அதாவது 90இலட்சம் டன்களை பொலிவியா நாடு கொண்டுள்ளது. லித்தியம் மின்கலங்களில் முக்கிய கனிமப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் Salar உப்பு நிலப்பகுதியில் சோடியம், பொட்டாசியம், மக்னீசியம் ஆகிய கனிமங்களும் கிடைக்கின்றன. Salar De Uyuni 10 பில்லியன் டன்கள் அளவிலான உப்பைக் கொண்டிருக்கின்றன. இந்த உப்பு நிலப்பகுதி, வரலாற்றுக்கு முந்தைய பல ஏரிகளுக்கிடையே நடந்த உருமாற்றங்களால் உருவானது. ஏறக்குறைய 30ஆயிரம் முதல் 42ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றுக்கு முந்தைய Minchin ஏரியின் ஒரு பாகமாக இது இருந்தது. இந்த ஏரி பின்னர் Tauca ஏரியாக மாறி, 140 மீட்டர் ஆழத்தைக் கொண்டிருந்தது. இது 14,900 முதல் 26,100 ஆண்டுகளுக்கு முந்தையது. அதற்குப் பின்னர் இது Coipasa ஏரியாக மாறியது. பின்னர் இந்த ஏரி காய்ந்து இரு சிறு ஏரிகளாக உருமாறியது. இறுதியில் இவை Salar De Uyuni உப்பு பாலைநிலத்தை உருவாக்கியுள்ளது. இங்கு கால நிலை கார்த்திகை மாதம் முதல் தை மாதம் வரை 21 டிகிரி செல்சிஸ்சாகவும், ஆனி மாதத்தில் 13 டிகிரி செல்சிஸ்சாகவும் இருக்கின்றது. இரவில் ஆண்டு முழுவதும் குளிராக, -9 டிகிரியிலிருந்து 5 டிகிரியாக இருக்கின்றது.



# நம்பிக்கையின் மேன்மை

1. ஆபேல் காயினுடைய பலியைவிட மேலான பலியைக் செலுத்தினார். ஆபேல் நம்பிக்கையினால்தான் பேசிக்கொண்டிருந்தார்.
2. நோவா கண்ணுக்குப் புலப்படாதவை குறித்து கடவுளால் எச்சரிக்கப்பட்டபோது தம் குடும்பத்தைக் காப்பாற்ற கவனத்தோடு ஒரு பேழையை அமைத்தது நம்பிக்கையினால்தான்
3. ஆபிரகாம் வயது முதியவராகவும், சாரா கருவுற இயலாதவராகவும் இருந்த போதிலும் அவர் தந்தையாவதற்கான ஆற்றல் பெற்றதும் நம்பிக்கையினால்தான்
4. ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியிடத் துணிந்தது நம்பிக்கையினால்தான்
5. யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் ஆசி வழங்கியது நம்பிக்கையினால்தான்
6. யாக்கோபு தாம் இறக்கும்முன் யோசேப்பின் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆசி வழங்கியது நம்பிக்கையினால்தான்
7. மோசே பிறந்தபோது குழந்தை அழகாய் இருக்க கண்டு அவருடைய பெற்றோர் ஒளித்து வைத்திருந்ததும் நம்பிக்கையினால்தான்
8. மோசே அரசனுடைய சீற்றத்திற்கு அஞ்சாது அவர் எகிப்தை விட்டு வெளியேறியதும் நம்பிக்கையினால்தான்
9. இஸ்ராயேலர் செங்கடலைக் கடந்து சென்றதும் நம்பிக்கையினால்தான்
10. கிதியோன், பாராக்கு, சிம்சோன், இப்தாரு, தாவீது, சாமுவேல் ஆகியோர் அரசுகளை வென்றது நம்பிக்கையினால்தான்
11. உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படும் போது மனவுறுதி உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியும்.



# இம்மாதத்தில்

✠ பேதுரு

# தலைமைத் தூதர்கள்

## புரட்டாதி 29

## புனித மிக்கேல்



மிக்கேல் என்றால் **'இறைவனுக்கு இணை யார்'** என்று பொருள். மோட்சத்தில் சாத்தானையும், அவனுடைய சகாக்களையும் எதிர்த்து நல்ல சம்மனசுக்கள் போரிட்டார்கள். அவர்களில் முக்கியமான வானதூதர் மிக்கேல்

## புனித கபிரியேல்



கபிரியேல் என்றால் **'இறைவனின் பலம்'** என்று பொருள். கடவுளது வல்லமையையும், மகிமையையும் காட்டும் ஒவ்வொரு வேலையிலும் இவர் தூதராக அனுப்பப்படுகின்றார். இரட்சகரது வருகையையும், அவர் வரும் காலத்தையும் இவர் முன்னறிவித்தவர். ஒலிவ மரத்தோப்பில் இயேசுவைத் தேற்றியவரும் புனித கபிரியேல் என பிதாக்கள் கூறுகின்றார்கள்.

## புனித இரபேல்



இரபேல் என்னும் சொல்லுக்கு 'இறைவன் குணமாக்கினார்' என்று பொருள். பழைய ஏற்பாட்டில் பெரிய தோபியாஸ் பார்வையிழந்து இருந்த போது இவர் புதுமையாகக் குணமாக்கினார் என்றும், அவரின் மகனுக்கு நீண்ட பயணத்தில் வழித்துணையாகச் சென்றார் என்றும் கூறப்படுகிறது. எனவே நோயாளிகளுக்கும், பயணிகளுக்கும் பாதுகாவலராகிய இவரது உதவியைத் தேடுவோம்.



"சிமியோன் குழந்தை இயேசுவுக்கும் அதன் தாய் மரியாளுக்கும் ஆசி கூறி மரியாவை நோக்கி இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும் உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" (லூக் 2: 34-35) பல நூற்றாண்டு காலாமாக விசுவாசிகள், குறிப்பாக புனிதர்கள் மீட்பரின் திருப்பாடுகளைப் பற்றியும், மரியன்னை சிலுவையடியில் நிலைகுலைந்து நின்றபோது அவருடைய உள்ளத்தைத் துன்பவாள் ஊடுருவிப் பாய்ந்தது என்பதையும் நினைத்து உருகி வருகின்றனர். இதன் ஒளியில் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களின் வாழ்க்கையில் துயரங்களும், துன்பங்களும் பிரிக்க முடியாதவை என்பதும் புலனாகிறது. துன்பங்களின் நடுவே நமக்கு ஆறுதலும் வலிமையும் பெற்றுத்தரும் மேலான தயாக விளங்குகின்றார் மரியா.

யோவான் நற்செய்தியாளர் கல்வாரி மலையில் இயேசுவின் சாவில் மறைந்துள்ள ஆழமான மறையுண்மையைக் கண்டு கொள்கின்றார். தம் அன்புத் தாயை யோவானிடம் தாரை வார்க்கிறார். மனுக்குலத்தின் பெயரால் யோவான் அவரை ஏற்றுக் கொள்கின்றார். இவ்விடத்தில் மரியா உலக இறுதிவரை திருச்சபையை ஏற்கும் பொறுப்பினைப் புரிய வைக்கின்றார். மரியாவே திருச்சபையாகக் காட்சியளிக்கின்றார். யோவான் திருச்சபையில் ஓர் உறுப்பினர். மரியா இயேசுவைப் பேணி வளர்த்தார். இதுபோல இயேசுவின் சீடர்களையும் உலக முடிவுவரை பேணி வளர்க்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

# ஏழு வாள் துளைத்த இறையன்னையின் விழா

புரட்டாதி -15

*அழுகின்ற குழந்தை அன்னையின் முகம் கண்டால் சிரிக்கும்.*
*அன்னை மரியாவை அடைக்கலம் தேடும் யாரும் ஆறாத துயரையும் வெல்லும் ஆற்றல் பெறுவர்.*

இந்தத் திருவிழா முதலில் கி.பி 1668ல் தோன்றியது. கி.பி 1814ல் திருத்தந்தை 7ஆம் பத்திநாதர் நாடுகடத்தப்பட்டதிலிருந்து மீளவும் உரோமை நகர் வந்தடைந்தபோது நன்றியறிதலாகத் திருச்சபை முழுவதிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. கி.பி 14ஆம் நூற்றாண்டில் செர்வைட்ஸ் என்னும் வியாகுல அன்னைத் துறவற சபையார் இப்பக்தியை பரப்பினர். இந்தத் திருநாளே இந்த சபையின் பாதுகாவலியின் திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது. புரட்டாதி திங்களின் நடுவே தாய்த் திருச்சபை கன்னிமரியாளின் ஏழு துன்பங்களை நமது நினைவுக்குக் கொண்டு வருகின்றது. அவையாவன:

1. எருசலேம் தேவாலயத்தில் தூயமரியன்னை குழந்தை இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த வேளையில் சிமியோன் கன்னிமரியாவைப் பார்த்து "உமது இதயத்தை ஒருவாள் ஊடுருவும்" என்றார்.
2. குழந்தை இயேசுவைக் காப்பாற்ற 300 மைலுக்கு அப்பாலுள்ள எகிப்து நாட்டுக்கு போகும் வழியில் அடைந்த துன்பம்.
3. இயேசுவுக்கு 12 வயது நடக்கும்போது எருசலேம் தேவாலயத்தில் காணாமற் போனதினால் அவர் அடைந்த துயரம்
4. இயேசு கல்வாரி மலைக்குச் சிலுவை சுமந்து செல்லும்போது அவரைக்கண்டு அதனால் அடைந்த ஆறாத துயரம்
5. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது கன்னிமரி அடைந்த கடலிலும் பெரிய துன்பம்
6. உயிர் பிரிந்த இயேசுவை சிலுவையில் இருந்து இறக்கி அவர் மடியில் கிடத்திய போது அவரடைந்த ஆறாத் துன்பம்.
7. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்யும்போது அடைந்த பெருந்துயர்

# வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருத்தலம்.





இயேசுவின் தாயான மரியா உலகின் பல நாடுகளில் தேவையானபோது, தேவையான நேரங்களில், சிறார் முதல் அனைத்து வயதினருக்கும் தோன்றி தமது மகன் இயேசுவின் மீது உலகினர் நம்பிக்கை கொண்டு வாழுமாறு அழைப்பு விடுத்து வருகின்றார். அன்னை மரியா காட்சி கொடுக்கும் இடங்களை வைத்தே பல நேரங்களில் அவர் அழைக்கப்படுகின்றார். இந்தியாவின் தமிழ்நாட்டில் வங்கக் கடலோரம் அமைந்துள்ள சிறிய ஊரான வேளாங்கண்ணியில் அன்னை மரியா காட்சி அளித்ததால் அவர் வேளாங்கண்ணி அன்னை என அழைக்கப்படுகின்றார். இத்தாய் மனிதரின் உடலையும், உள்ளத்தையும் அற்புதமாய்க் குணமாக்கி வருகின்றார். ஏவனே இவர் நல்வாழ்வளிக்கும் ஆரோக்கியத்தாய் என அழைக்கப்படுகின்றார். 16ஆம் நூற்றாண்டின் மத்தியில் வேளாங்கண்ணியில் அன்னைமரியா தோன்றி முதல் மூன்று காட்சிகளால், முதல் மூன்று புதுமைகளால், மத, இன, மொழி பாகுபாடின்றி அவர் புகழ் எங்கும் பரவத் தொடங்கியது.

வேளாங்கண்ணி என்றால் விவசாய நிலம் என்று அர்த்தம். இங்கு இருந்த குளத்தைச் சுற்றி வேளாண்மை நடந்தது. நாகப்பட்டினம் அருகே உள்ள இந்துமத பண்ணையார் ஒருவருக்கு இந்துமதச் சிறுவன் ஒருவன் பால்கொண்டு செல்வது வழக்கம். அன்று அச்சிறுவன் பால்கொண்டு சென்றபோது, வழியிலிருந்த அந்தக் குளத்துக்கரையில் ஆலமரத்துக்கு அடியில் பால் செம்பை வைத்துவிட்டு சற்றே இளைப்பாறினான். அப்போது ஓர் அழகிய பெண் கையில் குழந்தையுடன் தோன்றி அக்குழந்தைக்குப் பால் கேட்டார். அந்த அன்னையின் விண்ணக அழகால் மெய்சிலிர்த்த அச்சிறுவன் குழந்தை இயேசுவுக்கு கொஞ்சம் பால் கொடுத்தான். பின் எழும்பி பண்ணையார் வீட்டுக்கு சென்றபோது காலதாமதமாகிவிட்டது. பாலும் குறைந்திருந்தது. இதற்கான காரணத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டான் சிறுவன்.

பண்ணையார் கோபத்துடன் அச்செம்பை வாங்கிப் பார்த்தபோது பால் செம்பு நிறைய இருந்தது. அத்தோடு, அப்பாலை கூட வைத்தபோது, பாத்திரம் நிரம்பி பால் பொங்கி வீடு முழுவதும் வழிந்தது. இதைப் பார்த்த பண்ணையார் இது ஏதோ புதுமை என்பதை உணர்ந்து அப்பெண்ணாகிய அன்னைமரியா காட்சி கொடுத்த இடத்துக்கு அச்சிறுவனுடன் சென்றார். மீண்டும் அவர்களுக்கு அன்னைமரியா தோன்றினார். இதையறிந்த அந்தப் பக்கத்து கத்தோலிக்கர் மிகவும் மகிழ்ந்தனர். அந்தக் குளம் மாதா குளம் என அழைக்கப்படுகின்றது. அன்னை காட்சி அளித்த இடத்தில் மக்கள் கூடி செபிக்கத் தொடங்கினர். இவ்வாறு தனது மகனுக்காக மனதுருகி செபித்த ஒரு தாயின் வேண்டுதலுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த முதல் புதுமை நடந்து சில ஆண்டுகள் கழித்து அன்னைமரியா மீண்டும் தோன்றினார்.

வேளாங்கண்ணிக்கு வெளியே நடுத்திட்டு என்ற இடத்தில் மோர் விற்றுக் கொண்டிருந்த கால் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிச் சிறுவன் ஒருவனுக்கு அன்னைமரியா குழந்தை இயேசுவுடன் தோன்றி, குழந்தை இயேசுவுக்கு கொஞ்சம் மோர் கேட்டார். அச்சிறுவனும் கொடுத்தான். பின்னர் அன்னைமரியா அச்சிறுவனிடம் "மகனே, எழுந்து நாகப்பட்டினத்தில் உள்ள செல்வந்தரிடம் சென்று ஓர் ஆலயம் கட்டச் சொல்" என்றார். அன்னையின் வார்த்தைகளைக் கேட்ட சிறுவன் அதிர்ந்து போனான். "அம்மா என்னால் எப்படி நடக்க முடியும்?" என்றான் சிறுவன். "உன்னால் முடியும்" என்றார் அன்னை. அவன் எழுந்தான், நடந்தான், அங்கு ஓடத்தொடங்கியவன் செல்வந்தரின் வீட்டில் போய்த்தான் நின்றான். அச்செல்வந்தர் ஒரு கத்தோலிக்கர் அவருக்கும் அன்றிரவு அன்னைமரியா கனவில் தோன்றி ஆலயம் கட்டச் சொல்லியிருந்தார். அவரும் அச்சிறுவனும் புதுமை நடந்த நடுத்திட்டுக்கு வந்தனர். அங்கு கூரையினால் ஓர் ஆலயத்தையும் அவர் கட்டினார். அந்தச் சிற்றாலயம் புனித இடமாக மாறியது. அன்னைமரியாவை ஆரோக்கியத் தாய் என அழைக்கலாயினர்.


இன்னும் சிறிது காலம் கழித்து இந்தியாவுக்கு பயணம் செய்த போர்ச்சுக்கீசிய வணிகர்களின் பாய்மரக் கப்பல் நடுக்கடலில் வீசியப் புயலில் சிக்கியது. அவர்கள் செய்வதறியாமல் திகைத்து அன்னைமரியாவிடம் உதவி கேட்டனர். "அம்மா நாங்கள் கரை சேரும் இடத்தில் உமக்கு ஓர் ஆலயம் கட்டுவோம்" என்றும் வாக்குறுதி அளித்தனர். மரியன்னையின் உதவியால் புயல் அடங்கி கடல் சீற்றம் தணிந்தது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இறையடியார் கர்தினால் குரே ஆண்டகையின் நினைவுத் தினத்தை முன்னிட்ட குறுக்கெழுத்துப்போட்டி

ஞான ஒளி பத்திரிகையில் ஆடி மாதம் 07,21 மற்றும் ஆவணி மாதம் 04 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட கர்தினால் குரே ஆண்டகையைப் பற்றிய கட்டுரைகளை வாசித்து விடையளிக்கவும். இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள குறுக்கெழுத்துப்போட்டிக்கான கட்டங்களில் உங்கள் விடைகளை எழுதி, அத்துடன் உங்கள் பிறப்புச் சான்றிதழ் பிரதியையும் சேர்த்து [ஆசிரியர், ஞான ஒளி, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு – 08] என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்]

## 12 வயதின் கீழ்





### மேலிருந்து கீழ்

1. இலங்கையின் முதலாவது கர்தினால்
2. தேசிய குருமடம் அமைந்துள்ள இடம்
3. பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் வளர்ச்சியுற்ற சமயக் கல்வி (குழம்பியுள்ளது)
4. தேசிய பசிலிக்கா அமைந்துள்ள இடம்
5. கர்தினால் குரே சேர்ந்த துறவற சபையின் சுருக்கக் குறியீடு (கீழிலிருந்து மேல்)

### இடமிருந்து வலம்

1. கர்தினால் குரேக்கு முன்பு இருந்த பேராயர்
2. பழைய புனித பேர்ணாட் பெரிய குருமடத்தில் அமைந்துள்ள நிறுவனம்
3. அருட்தந்தை இக்னேசியஸ் பெரேராவின் தொழில்நுட்பக் கல்வி நிலையம்
4. அப்போது இருந்த சிலாப ஆயரின் பெயர்
5. கர்தினால் குரே பங்கு பற்றிய பொதுச்சங்கம்

## 16 வயதின் கீழ்





### மேலிருந்து கீழ்

1. இலங்கையின் முதலாவது கர்தினால்
2. பழைய புனித பேர்ணாட் பெரிய குருமடத்தில் அமைந்துள்ள நிறுவனத்தின் பெயர்
3. தேசிய குருமடம் அமைந்துள்ள இடம் (குழம்பியுள்ளது)
4. தேசிய பசிலிக்கா அமைந்துள்ள இடம்
5. பெரிய திருத்தலத்தை குறிப்பிடும் பெயர்?(குழம்பியுள்ளது)
6. கர்தினால் குரே திருமுழுக்குப் பெற்ற பங்கு?
7. கர்தினால் குரே ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்டம்
8. அப்போது இருந்த சிலாப ஆயரின் பெயர்(குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

1. கர்தினால் குரே சேர்ந்த துறவற சபையின் பெயர் (குழம்பியுள்ளது)
2. அருட்தந்தை இக்னேசியஸ் பெரேராவின் தொழில்நுட்பக் கல்வி நிலையம் (குழம்பியுள்ளது)
3. கர்தினால் குரே பங்குபற்றிய பொதுச்சங்கம்
4. செடெக் அமைப்பின் தற்போதைய பெயர் (குழம்பியுள்ளது)
5. பேராயருக்கு உரித்தான கழுத்துப்பட்டியின் பெயர்
6. கர்தினால் குரேயை கர்தினாலாக உயர்த்திய பாப்பரசர் (மாறியு ள்ளது)
7. 1980களில் ஆட்சியைக் கைப்பற்ற தனியார் பாடசாலைகளுக்குரிய ஆசிரியர் ஊதியத்தை வழங்கிய கட்சியின் சுருக்கக் குறியீடு

## 20 வயதின் கீழ்




### மேலிருந்து கீழ்

1. இலங்கையின் முதலாவது கர்தினாலின் பெயர்
2. கர்தினால் குரே திருமுழுக்குப் பெற்ற பங்கு
3. அவர் குருவாக முதலில் பணி புரிந்த இடம்
4. கர்தினால் குரேக்கு முன்பாக இருந்த பேராயர்
5. அன்னை மரியாளை இலங்கையின் பாதுகாவலியாக பிரகடனப்படுத்தியபோது இடப்பட்ட பெயர் (குழம்பியுள்ளது)
6. பேராயருக்கு உரித்தான விசேட கழுத்துப் பட்டியின் பெயர்
7. தேசிய பசிலிக்கா அமைந்துள்ள இடம்
8. தேசிய குருமடம் அமைந்துள்ள இடம் (குழம்பியுள்ளது)
9. கர்தினாலாகிய பின்னர் அவர் அங்கத்தவராக பணியாற்றிய சபைகளில் ஒன்று
10. பாப்பரசர் 6ஆம் பவுல் இலங்கையை தரிசித்து திருப்பலி ஆற்றிய இடம் (கீழிலிருந்து மேல்)
11. கர்தினால் குரே ஓய்வுபெற்ற பின்னர் சென்ற இடம்

### இடமிருந்து வலம்

1. கர்தினால் குரே சேர்ந்த துறவற சபையின் பெயர்
2. பழைய புனித பேர்ணாட் பெரிய குருமடத்தில் தற்போது அமைந்துள்ள நிறுவனத்தின் பெயர் (குழம்பியுள்ளது)
3. கர்தினால் குரே ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட மறைமாவட்டம்
4. பெரிய திருத்தலத்தை குறிப்பிடும் பெயர்?
5. அப்போது இருந்த சிலாப ஆயரின் பெயர்(குழம்பியுள்ளது)
6. அருட்தந்தை இக்னேசியஸ் பெரேராவின் தொழில் நுட்பக் கல்வி நிலையம் (மாறியுள்ளது)
7. கர்தினால் குரே பங்குபற்றிய பொதுச்சங்கம்
8. கர்தினால் குரேயை கர்தினாலாக உயர்த்திய பாப்பரசர்
9. செடெக் அமைப்பின் தற்போதைய பெயர்
10. கர்தினால் குரேயின் காலத்தில் அரச மயமாக்கப்பட்ட அமைப்பு
11. 1980களில் ஆட்சியைக் கைப்பற்றி தனியார் பாடசாலைக்குரிய ஆசிரியர் ஊதியத்தை வழங்கிய கட்சி (குழம்பியுள்ளது)




# "ஓங்கி குரல் எழுப்புங்கள்"

## அழகும் நன்மைத்தனமும், உண்மையும் நிறைந்ததாக வருங்காலத்தை அமையுங்கள்

500 இத்தாலிய இளையோர் திருப்பயணிகளை வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ், துணிச்சலுடன் முன்னோக்கிச் சென்று "ஆர்வமாய் ஓங்கிக் குரல் எழுப்புங்கள்" என்று கூறினார். நம்பிக்கை ஆண்டைக் கொண்டாடுவதற்காக உரோமைக்கு திருப்பயணம் மேற்கொண்ட இத்தாலியின் Piacenza - Bobbio மறைமாவட்டத்தின் ஏறக்குறைய 500 இளையோர் திருப்பயணிகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் தான் இவர்களைச் சந்திக்க விரும்பியதற்கான காரணத்தை எடுத்துச் சொன்னார்.

"இளையோராகிய நீங்கள் உங்கள் இதயங்களில் நம்பிக்கையின் வாக்குறுதியைக் கொண்டுள்ளீர்கள், நீங்கள் நம்பிக்கையை எடுத்துச் செல்பவர்கள், உண்மையில் நீங்கள் நிகழ்காலத்தில் வாழ்ந்துகொண்டு வருங்காலத்தை நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்களே வருங்காலத்தை உருவாக்குகின்றவர்கள் என்பதால் உங்களைச் சந்திக்க விரும்பினேன்" என்று கூறினார் அழகு, நன்மைத்தனம், உண்மை ஆகிய மூன்றின்மீது இளையோர் ஆவல் கொண்டிருக்கின்றனர் என்றுரைத்த திருத்தந்தை "உங்கள் இதயத்திலுள்ள இம்மூன்றையும் ஆர்வமாய் எடுத்துச் சென்று ஓங்கிக் குரல் எழுப்புங்கள்" என்றும் இளையோரிடம் கூறினார்.

ஓங்கிக் குரல் எழுப்புங்கள் என்று சொல்லும் போது, நிறையத் தீமை செய்யும் கலாச்சாரத்துக்கு எதிராக, அழகு, நன்மைத்தனம், உண்மை ஆகிய விழுமியங்களுடனும் துணிச்சலுடனும் ஓங்கி குரல் எழுப்ப வேண்டும் என்று தான் கூற விரும்புவதாக தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# வார்த்தைகளால் கொலை செய்யாதீர்கள்



இறைவன் இருக்குமிடத்தில் வெறுப்போ, பொறாமையோ அல்லது எரிச்சலோ இருக்காது, அதோடு பிறரைக் கொல்லும் புறணிப்பேச்சுக்கள் இருக்காது. இரண்டு மாத கோடை கால இடைவெளிக்குப் பின்னர் வத்திக்கான் புனித மார்த்தா இல்லத்தில் தனது வழக்கமான திருப்பலியின் மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறினார். லூக்கா நற்செய்தியில் விவரிக்கப்பட்டுள்ள, இயேசுவுக்கும் நாசரேத்தூர் மக்களுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பை மையமாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை அம்மக்களிடம் விசுவாசம் குறைபடுகின்றது என்று இயேசு சொல்லியபோது அவர்கள் கடுஞ்சினமுற்று அவரை ஊருக்கு வெளியே துரத்தி மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட இழுத்துச் சென்றனர் என்றார். அச்சமயத்தில் இயேசுவின் அருள்மொழிகளைக் கேட்டு உருவாகிய வியப்புச் சூழல் குற்றத்தில் முடிந்தது, அவர்களின் பொறாமையும் எரிச்சலும் இயேசுவை அவர்கள் கொல்வதற்கு இட்டுச்சென்றன. நாம் புறணி பேசுவதற்குப் பழகியுள்ளோம், இதனால் நம் குழுக்களும், ஏன் நம் குடும்பங்களும் எத்தனை தடவைகள் நரகமாக மாறியிருக்கின்ற, அச்சமயங்களில் நம் வார்த்தைகளால் நம் சகோதரரைக் கொலைசெய்யும் குற்றவாளிகளாகிறோம். ஒரு குடும்பமும், ஒரு குழுவும் பொறாமையால் அழிக்கப்படலாம், இந்தப் பொறாமை இதயத்தில் தீமையை விதைத்து அடுத்தவரைப் பற்றி மோசமாக பேசுவதற்குக் காரணமாகின்றது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்

# "இராணுவங்கள் தேவையில்லை"

இயேசு இருக்குமிடத்தில் எப்பொழுதும் தாழ்மையும், பணிவும், அன்பும் இருக்கும் என்று வத்திக்கான் புனித மார்த்தா இல்லத்தில் நிகழ்த்திய திருப்பலியில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம் இதயங்களில் பேசும் "அமைதி ஒளிக்கும்" நம்மை தற்பெருமையும் வீம்பும் உடையவர்களாக ஆக்கும் இவ்வுலகின் "செயற்கை ஒளிக்கும்" இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. கிறிஸ்தவ தனித்தன்மை, என்பது இருளின் தனித்தன்மை அல்ல, ஆனால் அது ஒளியின் தனித்தன்மை என்றும் கிறிஸ்துவின் ஒளி, ஞானத்தின் ஒளி, அமைதியின் ஒளி, தாழ்மையின் ஒளி, இந்த ஒளி நமக்கு அமைதியை அளிக்கின்றது.

எனவே உண்மையான இயேசுவை அச்சமின்றி பின்பற்ற வேண்டும், தீய ஆவிகளை விரட்டுவதற்கு இயேசுவுக்கு இராணுவம் தேவையில்லை என்று தனது உரையில் கூறினார் திருத்தந்தை

# கடந்த இருபது ஆண்டுகளில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

## (யுனெஸ்கோ)

எழுத்தறிவு மனித வளர்ச்சிக்கு இன்றியமையாத உந்து சக்தியாக இருக்கும்வேளை, இவ்வுலகில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை கடந்த இருபது ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்று யுனெஸ்கோ என்ற ஐ.நா.வின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவன இயக்குனர் இரினா போக்கோவா கடந்த புரட்டாதி 08ஆம் திகதி அனைத்துலக எழுத்தறிவு நாள் கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி வெளியிட்ட செய்தியில், 1990ஆம் ஆண்டில் உலகில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 76 விகிதமாகவும், இது தற்போது 84 விகிதமாகவும் உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

ஐ.நாவின் மில்லென்ய வளர்ச்சித்திட்ட இலக்குகள் நிறைவேறுவதற்கு அனைத்துலக அளவில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளே இதற்குக் காரணம் எனச் சொல்லியுள்ள போக்கோவா, இன்னும் 20 ஆண்டுகளில் உலகில் எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கை 10 கோடிக்கு மேலாக இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உலகிலுள்ள 77 கோடியே 40 இலட்சம் வயதுவந்த எழுத்தறிவில்லாதவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெண்கள் எனவும் அவரின் செய்தி கூறியுள்ளது.

"21ஆம் நூற்றாண்டுக்கு எழுத்தறிவு" என்ற தலைப்பில் இவ்வாண்டில் இந்நாள் கடைப்பிடிக்கப்பட்டது.




அகத்திக்கீரையின் மருத்துவப் பயன்களைத் தெரிந்து கொள்வோம்.

- விட்டமின் ஏ. அதிக அளவு சுண்ணாம்புச் சத்து கொண்டது அகத்திக் கீரை
- வாய் மற்றும் வயிற்றில் புண் உள்ளவர்கள் இதை ஒரு வாரம் தொடர்ந்து சாப்பிட்டு வர உடனடி நிவாரணம் கிடைக்கும்.
- வயதானவர்கள் இதனை சூப் பதத்தில் மட்டுமே சாப்பிட வேண்டும்.
- அகத்திக்கீரை மருந்தின் வீரியத்தை குறைத்து விடும். அதனால் மருந்து சாப்பிடும் போது அகத்திக் கீரையை உண்ணக் கூடாது.
- இதை அடிக்கடி சமைத்து உண்டால் குருதியை கெடுத்து சொறி, சிரங்குகளை உண்டாக்கும். உடல் வெளுத்துப்போய் வீங்கி காணப்படுதல், வயிற்றுக் கடுப்பு, கழிச்சல், கடுவன் போன்றவற்றை உண்டாக்கும்.
- அகத்தி மிகுந்த மருத்துவப் பலன் உடையது என்றாலும் இதனை அளவறிந்து வாரத்திற்கு ஒரு முறை மட்டும் உண்பதே சிறந்தது.
- சிறுகீரையைப் போலவே நஞ்சை முறிக்கும் தன்மையுடையது அகத்திக்கீரை. கண்பார்வைக்கும், வலிமையான நரம்புக்குமுரிய சக்தியை அளிப்பதோடு கண் சம்பந்தமான பிற நோய்களிலிருந்தும் காப்பாற்றும். 15 நாட்களுக்கொரு முறை மட்டுமே சாப்பிட வேண்டும். பொரியலாக வைத்துச் சாப்பிடலாம்.
- அகத்திக்கீரை விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டதால் இதனை கிருமி நாசினி என்று சொல்வதுண்டு. இந்த கீரை குளிர்ச்சி தருவதுடன் ஜீரண சக்தியை அதிகரிக்கும். பித்தத்தை தணிக்கும். பல் எலும்பை உறுதிப்படுத்தும். வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும்.
- பீடி, சிகரெட் குடிப்பவர்கள் மற்றும் புகையிலை போடுபவர்கள் இந்த கீரையை அடிக்கடி பயன்படுத்த வேண்டும். சாம்பார், குழம்பில் போட்டோ அல்லது பொரியல் செய்தோ சாப்பிடலாம். இதனால் உடலில் உள்ள நச்சுத்தன்மை போகும்.
- அகத்திக்கீரையை சமையலில் அவ்வப்போது சேர்த்து வர உடலுள்ள வெப்பம், மலச்சிக்கல் ஆகியவை குறைவதுடன் பித்த நோய் நீங்கும்.
- அகத்திக்கீரையை அரிசி களைந்த நீரில் உப்பு, சீரகம் சேர்த்து குழைய வேக வைத்து உண்டும். நீரைப் பருகியும் வந்தால் பைத்தியம் முதலிய மூளைக்கோளாறுகள் நீங்கும்.

01ம் பக்கத் தொடர்ச்சி – விசுவாசத்தில் உறுதிபெற்று...

நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள்" (லூக்கா 24:9) என்றும், இன்னுமொரு இடத்தில் "சீமோனே, சீமோனே இதோ கோதுமையைப்போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" (லூக்கா 22:31-33) என்றும், "ஆனால், தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளின் வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (திபா 1:8) என்றும், "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்றும் கூறினார்.

அவ்வாறே இயேசு தம் மறையை உலகிற்கு பரப்ப அழைத்த அப்போஸ்தலர்களை அவர்களின் விசுவாசத்தில் உறுதி பெறச் செய்தார். அவ்வாறு செய்தது. நம்பிக்கையில் உறுதி பெற்றாலன்றி மறை பரப்ப யாருக்கும் முழுமையாக அர்ப்பணமாக முடியாது என்பதை இறைவன் அறிந்தனாலாகும்.

இறைவனின் சீடர்கள் யார் யாரெல்லாம் விசுவாசத்தில் உறுதி பெற்றார்களோ அவர்கள் புனித பவுல் எழுதிய கடிதங்களில் காண்பிக்கப்படுகிறார்கள். புனித பேதுரு ஜெருசலேமிலிருந்து புறப்பட்டு உரோம ராஜ்ஜியம் முழுவதும் இறையன்புக்கு சாட்சிகளாகவும், அவ் மறைக்காக தம் உயிரையே பரித்தியாகம் செய்தார். அிவி சுவாசத்தின் அப்போஸ்தலர் என்றழைக்கப்பட்ட புனித தோமா உயிர்தெழுந்த கிறிஸ்துவை அறிந்து, அந்த நம்பிக்கையில் உறுதி பெற்று, பெரும் கடினமான பயணத்தை மேற்கொண்டு இந்தியா வரை நற்செய்தியை பரப்பி வந்ததாக வரலாற்றில் நாம் காண்கின்றோம். மற்றைய அப்போஸ்தலர்களும், தனக்கு தெரிந்த இடங்களுக்கு இந்த இறைவனின் மறையை கொண்டு சென்றமை இரகசியமல்ல. எல்லோரும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு உறுதி பெற்றார்கள்.

இறை அழைப்பு : "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15). என்பது அன்று தொட்டு இன்று வரை கூறப்படுகிறது. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறை மறைபரப்பு தூதனாகும் உலக மறை பரப்பு ஞாயிறு தினத்தை கொண்டாடும் இன்றைய நாளில், திருச்சபை தாயானவள், இறைவனுக்காக எம்முடைய இந்த அழைப்பை எம் எல்லோருக்கும் ஞாகப்படுத்துகின்றாள். நாங்களும் அன்று அப்போஸ்தலர்கள் போல எம்முடைய பலவீனங்களை ஏற்று, இறையருளினால் நம்பிக்கையில் உறுதி பெற்று, மறைபரப்பு பணியில் ஈடுபடுவோம். "நான் இறுதி வரை உங்களுடன் இருப்பேன்" இறைவார்த்தையை நாம் அழைப்பின் அடிப்படையில் சொல்லாலும் செயலாலும் மற்றும் வாழ்வாலும் முன்மாதிரிகையாக இதற்கு அர்ப்பணமாவோம். அதற்காக செபம், ஒறுத்தல்கள் சக்தியுள்ள ஆயுதங்கள் என மனதிற்கொள்வோம். இறைவன் அன்றுபோல் என்றும் தூய ஆவியால் வழிநடத்துகிறார். "விசுவாசத்தில் உறுதிபெற்று, அர்ப்பணிப்புடன் இயேசுவை அறிவிப்போம்"

### 1ம் பக்கத் தொடர்ச்சி – மீண்டும் ஒரு போதும்...

இதிலும் கடவுளின் சாயலாகவும், பாவனையாகவும் உருவாக்கப்பட்ட மனித சமுதாயம் ஒரே குடும்பமாக உள்ளது. இக்குடும்பத்தில் உண்மையான சகோதரத்துவம், வார்த்தைகளால் மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் அடுத்தவரை தனது சகோதர, சகோதரியாக நினைத்து அன்பு கூரப்படுகின்றது. கடவுளின் உலகம் என்பது ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு, அடுத்தவரின் நலனுக்கு பொறுப்பானவர் என்பதை உணரும் உலகம். நான் உண்மையிலே விரும்பும் உலகம் இதுதானா? நம்மிலும், நாம் பிறரோடு கொள்ளும் உறவுகளிலும், குடும்பங்களிலும், நகரங்களிலும், நாடுகளுக்கு இடையேயும் நாம் விரும்பும் நல்லிணக்க மற்றும் அமைதியான உலகம் இந்த உலகமா? அனைவரின் நன்மைக்கு இட்டுச்செல்கின்ற மற்றும் அன்பினால் வழிநடத்தப்படும் உலகத்தில் பாதைகளை தேர்ந்தெடுப்பதல்லவா உண்மையான சுகந்திரம்!

நாம் இந்த உலகத்திலா வாழ்கின்றோம் என்று நாம் வியப்படைகின்றோம். ஆயினும் வன்முறையும், பிரிவினையும், முரண்பாடும், போரும் இவ்வுலகில் இருக்கின்றன. படைப்பின் சிகரமான மனிதர் படைப்பின் அழகையும், நன்மைத்தனத்தையும் தியானிப்பதை நிறுத்தும் போதும், தனது தன்னலத்துக்குள் நுழையும்போதும் இவை நடக்கின்றன. மனிதர் தன்னைப் பற்றி மட்டுமே, தனது சொந்த ஆதாயங்களை மட்டுமே நினைக்கும்போதும், தன்னை மையப்படுத்தும் போதும், ஆட்சி, அதிகாரச் சிலைகளால் கவரப்படுவதற்குத் தன்னை அனுமதிக்கும் போதும், கடவுளின் இடத்தில் தன்னை வைக்கும்போதும். எல்லா உறவுகளும் முறிந்து விடுகின்றன, அனைத்தும் பாழ்படுத்தப்படுகின்றது. பின்னர் வன்முறையும், புறக்கணிப்பும், உண்டாகின்றன.

நல்லிணக்கம் இன்மை என்று எதுவும் இல்லை. நல்லிணக்கம் அல்லது பெரும் குழப்பத்தில் நாம் விழுகின்றோம். பெரும் குழப்பத்தில் வன்முறை, விவாதம், போர், அச்சம்... இவை இருக்கின்றன. இந்த பெரும் குழப்பத்தில் கடவுள் மனிதரின் மனசாட்சிக்கு கேள்வியெழுப்புகின்றார். "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என்று கடவுள் கேட்டதற்கு, காயின் "எனக்குத் தெரியாது, நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியோ?" என்று பதில் சொன்னார் (தொ.நூல் 4:9). நான் உண்மையிலேயே என் சகோதரரின் காவலாளியா என்று நாம் நம்மையே கேட்பது நல்லது. ஆம் நீங்கள் உங்கள் சகோதரனுக்கு காவலாளிதான்! மனிதத்தோடு மனிதராக இருப்பது என்பது ஒருவர் ஒருவர் நலனில் அக்கறை கொள்வதாகும். ஆனால் நல்லிணக்கம் உடைபடும் போது பண்புகள் மாறுகின்றன. அக்கறையுடன் அன்புகூரப்பட வேண்டிய சகோதரர் சண்டையிடவும், கொலை செய்யவும் பகைவன் ஆகின்றார். அந்நேரத்தில் என்ன வகையான வன்முறை நிகழ்கின்றது, எத்தனை மோதல்கள், எத்தனைப் போர்கள் நம் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. எண்ணற்ற சகோதர சகோதரிகள் அனுபவித்த துன்பங்களை நாம் நோக்க வேண்டும். இது சந்தர்ப்பத்தால் நடப்பது அல்ல. இதுதான் உண்மை. ஒவ்வொரு வன்முறை செயலிலும், ஒவ்வொரு போரிலும் காயினின் மறுபிறப்பைக் கொண்டு வருகின்றோம். ஆம், நாம் அனைவரும் இன்றும் சகோதரருக்கு இடையேயான சண்டையின் வரலாற்றைத் தொடரச் செய்கின்றோம்.

இன்றும் நம் சகோதரருக்கு எதிராக நம் கைகளை ஓங்குகின்றோம். இன்றும் தன்னலம், சொந்த ஆதாயங்கள் போன்றவற்றை நம்மில் வளர அனுமதிக்கின்றோம். இந்தப் போக்கு இன்றும் இருக்கின்றது. நம் ஆயுதங்களை நிறைவுபடுத்தியிருக்கின்றோம். நமது மனசாட்சி ஆழ்ந்து உறங்குகின்றது. நம்மை நியாயப்படுத்துவதற்கு நம் கருத்துக்களை கூர்மையாக்கி இருக்கின்றோம். ஏதோ இது சாதாரணமாக நடப்பதுபோன்று அழிவையும், வேதனையும், மரணத்தையும் தொடர்ந்து விதைத்துக்கொண்டிருக்கின்றோம். வன்முறையும் போரும் மரணத்துக்கு மட்டுமே இட்டுச்செல்லும் அவை மரணத்தையே பேசும். வன்முறையும் போரும் மரணத்தின் மொழி.

இந்நேரத்தில் என்னையே கேட்கின்றேன். இந்தப் போக்கை மாற்ற இயலுமா? என்று. சங்கிலித்துதொடராக இடம்பெற்று வரும் இந்த மரணத்தில் இருந்தும், வேதனையில் இருந்தும் நாம் வெளியே வர இயலுமா? நாம் மீண்டும் அமைதியின் வழியில் நடந்து அதில் வாழ இயலுமா? அமைதியின் அரசியாகிய அன்னை மரியின் தாய்மைக்குரிய பார்வையின் கீழ் கடவுளின் உதவியைக் கேட்பதால் இது இயலும் என்று நான் சொல்கின்றேன். ஆம் இது ஒவ்வொருவரும் சொல்லக்கூடியதே. இன்று இரவு உலகில் ஒவ்வொரு மூலையில் இருந்தும் இது ஒவ்வொருவருக்கும் இயலக்கூடியதே என்று ஓங்கி குரல் எழுப்புவதை நான் கேட்க விரும்புகின்றேன். இன்னும் இதை விட மேலாக அரசுகளை ஆள்பவர்கள் உட்பட சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் ஆம் நாங்கள் விரும்புகின்றோம் என சொல்லவேண்டும் என விழைக்கிறேன்.எனது கிறிஸ்தவ விசுவாசம் திருச்சிலுவையை நோக்க வைக்கின்றது. அனைத்து நல்மனம் கொண்ட அனைவரும் ஒரு நிமிடம் திருச்சிலுவையை பார்க்க வேண்டும் என எவ்வளவு ஆவல் கொள்கின்றேன். அதில் கடவுளின் பதிலைக் காணலாம். வன்முறை வன்முறையோடு பதில் சொல்லாது மரணம் மரணத்தின் மொழியோடு பதில் சொல்லது. திருச்சிலுவையின் மௌனத்தில் ஆயுதங்களின் பெரும் சத்தம் நிறுத்தப்படட்டும். ஒப்புரவு, மன்னிப்பு, உரையாடல், அமைதி, ஆகியவற்றின் மொழி பேசப்படட்டும். இந்த இரவில் கிறிஸ்தவர்களாகிய நாமும் பிறமத நம் சகோதர சகோதரிகளும் நல் மனம் கொண்ட ஒவ்வொருவரும் மிகுந்த ஒலி எழுப்பி சொல்லுவோம். வன்முறையும் போரும் ஒருபோதும் அமைதிக்கான பாதைக் கிடையாது என்று உரக்கச் சொல்லுவோம். ஒவ்வொருவரும் மனச்சாட்சியின் ஆழத்துக்குச் சென்று இப்பொழுது சொல்லும் வார்த்தையை கேளுங்கள். "உங்கள் இதயத்தை கடினப்படுத்தும் சொந்த ஆதாயங்களை பின்னுக்குத் தள்ளுங்கள். உங்கள் இதயத்தை பிறர் மீது அக்கறை அற்றவர்களாக ஆக்கும் புறக்கணிப்பை விட்டு விலகுங்கள். உரையாடலுக்கும், ஒப்புரவுக்கும் உங்களை திறவுங்கள். உங்கள் சகோதரரின் துன்பங்களை நோக்குங்கள். அதனை மேலும் அதிகரிக்காதீர்கள். அசைக்கப்பட்டுள்ள நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள். இவை அனைத்தையும் மோதல்களால் அல்ல மாறாக, பேச்சுவார்த்தையாலேயே சாதிக்க முடியும்" ஆயுதங்களின் சட்டம் முடிவடையட்டும் பிறருக்கு எதிராக மற்றுமொன்று வேண்டாம். திருத்தந்தை 6ஆம் பவுல் அவரின் வார்த்தைகள் மீண்டும் ஒலிக்கட்டும். ஒருபோதும் மற்றுமொன்று வேண்டாம். போர் ஒருபோதும் மீண்டும் வேண்டாம். அமைதி, அமைதியில் மட்டுமே தன்னை வெளிப்படுத்தும். அமைதி, நீதியின் கோரிக்கையில் இருந்து பிரிக்கப்பட முடியாதது. ஆனால் அது சுய தியாகம், மன்னிப்பு, கருணை, இரக்கம், அன்பு, ஆகியவற்றில் இருந்து கிடைப்பது.மன்னிப்பு, உரையாடல், ஒப்புரவு, ஆகிய இவையே அன்புமிக்க சீரியாவிலும், மத்திய கிழக்கிலும், உலகெங்கிலும் அமைதியின் வார்த்தைகளாகும்.எனவே ஒப்புரவுக்காகவும், அமைதிக்காகவும் செபிப்போம். ஒப்புரவுக்காகவும், அமைதிக்காகவும் உழைப்போம். ஒவ்வோர் இடத்திலும் நாம் அனைவரும் ஒப்புரவு மற்றும் அமைதியின் ஆண்களும் பெண்களுமாக மாறுவோம்.

### 03ம் பக்கத் தொடர்ச்சி – விடுதலை தரும்...

உனமுனோ என்ற ஸ்பானிய தத்துவ ஞானி "நான் ஒரு திருப்தி அடைந்த பன்றியாக இருப்பதைவிட, கடும் துயருற்ற மனிதப்பிறவியாகவே இருக்க விரும்புகின்றேன்" என்று கூறினார். இன்று கோள மயமாக்கல் என்று அழைக்கப்படும் கூட்டாண்மை குடியேற்றவாதத்தை புதிய ஏகாபத்தியவாதத்தை எதிர்க்க வேண்டிய அவசர தேவை எமக்கு உள்ளது. இது ஒரு கொடிய, அநீதியான ஏற்றுக்கொள்ள முடியாத உலகளாவிய அமைப்பாகும். பெரும்பான்மை பொதுமக்களுக்கு அடிப்படைத் தேவைகளான சுயகௌரவம், உணவு, நீர் வதிவிடம் ஆகியவற்றை மறுக்கும் கொள்கைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவர எமக்குத் துணிச்சல் வேண்டும்.

## சிலுவையில் பொதிந்த விடுதலை

கிறிஸ்து எமக்கு விடுதலையை அளித்துள்ளார். கிறிஸ்தவத்தின் வழி விடுதலையின் வழியாகும். இந்த விடுதலை அன்புக்குப் பணிபுரிய தயாராயிருக்கும் (கலாத்தியர் 5:13, 1 கொரி 9:19) அன்பு செய்வதற்கும், பிறருக்கு வாழ்வு கொடுப்பதற்கும் விடுதலை வழி செய்யும்.

கிறிஸ்து செய்தது இதுவே, "தம் நண்பர்களுக்காக உயரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் 15:13) "இது எனது இரத்தம்" இவ்வார்த்தைகள் இயேசுவின் அசாதாரணமான சுதந்திரத்தை, புரட்சிகரமான அன்பை, எதற்கும் பின்வாங்காத பிரமாணிக்கத்தை நினைவுபடுத்துகின்றது. நீங்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே, ஒரு பாதையைத் தேர்ந்தெடுக்கின்றீர்கள். தனிமனிதனதும், மனுக்குலத்தினதும், முழு உலகத்தினதும் முழுமைக்காக தாமே சிலுவை மரணத்துக்கு தம்மைக் கையளித்த எமது ஆண்டவரிடமிருந்து நாம் விலகிப் போகலாகாது. சிலுவையில் அறையப்பட்ட எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் இறைவனின் புதல்வர் புதல்வியராக நாம் மகிமைமிக்கதோர் வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம். போராட்டம், வேதனை, கைவிடப்படுதல், துன்புறுத்தப்படுதல், மரணம் கூட விடுதலையின் இன்றியமையாக் கூறுகளாகும். சிலுவை விடுக்கும் இந்த அழைப்புக்கு எனது பதில்....?

### 02ம் பக்கத் தொடர்ச்சி –புதிய திருப்பீடச்...

நேரடிப் பொதுச் செயலராக 2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ஆம் திகதி நியமிக்கப்பட்ட இவர், 2009ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதியன்று தென் அமெரிக்கா நாடான வெனிசுலா நாட்டுக்கு திருப்பீடத் தூதராக நியமிக்கப்பட்டார். இவர் மெக்சிகோ மற்றும் நைஜரியத் திருப்பீடத் தூதரகங்களிலும் பணியாற்றியுள்ளார். வத்திக்கான் மற்றும் திருப்பீடத்தின் அனைத்து அரசியல் மற்றும் தூதரகப் பணிகள் திருப்பீடச் செயலகத்தின் கீழ் இயங்குகின்றன

### 12ம் பக்கத் தொடர்ச்சி – வேளாங்கண்ணி

கப்பலில் பயணம் செய்த போர்ச்சுக்கீசியர்கள் வேளாங்கண்ணியில் பாதுகாப்பாகக் கரை இறங்கினர். அன்று புரட்டாதி 8ஆம் நாள். அன்னைமரியின் பிறந்தநாள் விழா. தங்களைப் பாதுகாப்பாகக் கரைசேர்த்த அன்னைக்கு நன்றியாக, வேளாங்கண்ணியில் இருந்த சிறிய ஆலயத்தைப் பெரிதாகக் கட்டி எழுப்பினர். பின்னர் அவர்கள் அங்கு சில தடவைகள் வந்து கலை வண்ணமிக்க பீங்கான் ஓடுகளால் ஆலயப் பீடத்தை அலங்கரித்தனர். தங்கள் கப்பலின் பாய்மரத் தூணை ஆலயக் கொடிமரமாக நாட்டினர். அதில்தான் இன்றளவும் அன்னையின் கொடி பறந்து கொண்டிருக்கின்றது. போர்ச்சுக்கீசிய வணிகர்கள் கரை சேர்த்த நாளான அன்னையின் பிறந்த நாளிலேயே வேளாங்கண்ணி மாதா ஆலயத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொடக்கத்தில் நாகப்பட்டணம் பங்கின் துணை ஆலயமாக இருந்து வந்த வேளாங்கண்ணி 1771ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் அருள்பணி அந்தோணியோ டி ரொசாரியோ அடிகளார் கண்காணிப்பில் தனிப் பங்காக உருவானது. வேளாங்கண்ணி முதன்மைப் பேராலயம் 1920 மற்றும் 1933ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்டது. இந்த ஆலயத்தின் அற்புதங்களுக்கும், புகழுக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை 23ஆம் ஜான் அவர்கள் 1962ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ஆம் திகதி வேளாங்கண்ணித் திருத்தலத்தை "பசிலிக்காவாக" உயர்த்தினார். 1985ஆம் ஆண்டில் மாதா குளத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. படிப்படியாக இத்திருத்தல வளாகம் புதுப்பிக்கப்பட்டு ஆராதனை ஆலயம், ஒப்புரவு அருள்சாதன வசதிகள், பயணியர் விடுதிகள், பல்வேறு கல்வி நிறுவனங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், சமூகசேவை மையங்கள், இரயில் வசதிகள், என பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. ஐரோப்பாவின் லூர்து நகருக்குச் செல்லும் திருப்பயணிகள் போன்று இங்கும் திருப்பயணிகள் வருவதால் வேளாங்கண்ணித் திருத்தலம் கீழை நாடுகளின் லூர்து என அழைக்கப்படுகின்றது.

வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையைத் தேடி வரும் அனைவரும் அந்த அன்புத் தாயின் பரிந்துரையால் உடலிலும், மனத்திலும் அற்புதங்களைப் பெற்று மகிழ்வுடன் வீடு திரும்புகிறார்கள். புரட்டாதி 8, ஆரோக்கிய அன்னையின் விழாவாகும்.

## புனிதர்களின் பொன்மொழிகள்

### அன்பு

✷ அன்புத்தாய் மரியே, இயேசுவை அறிந்து கொள்ள என்னை வழி நடத்தும்! அவரை என்னிடம் அழைத்து வந்து இயேசுவின் அன்பில் இணைந்திருக்க எனக்குத் துணையாயிரும்
*முத் திமோத்தி*

✷ நாம் தவறி விழுவதும், அப்படிச் செய்து விட்டோம் என்பதை உணர்வதும் தேவை. நாம் தவறாவிட்டால் நம் பலவீனத்தையும் பாவ இயல்பையும் உணரமாட்டோம். மேலும் அவ்வேளைகளில்தான் நாம் கடவுளின் அற்புதமான அன்பை முழுமையாக அறிவோம்!
*முத். ஜூலியானா நார்விச்*

✷ அறிவால் அதிகம் நினைப்பதைவிட அதிகமாக அன்பு செய்யத் தூண்டுவதையே செய்!
*புனித அவிலா தெரசாள்*

✷ நீ செல்லுமிடமெல்லாம் அன்பை விதை.
முதலில் உன் குடும்பத்தில்.. உன்னிடத்தில் வருபவர் எல்லாம் மகிழ்ச்சியோடு செல்லும் படி உன் அன்பை வெளிப்படுத்து.. கடவுளின் பாசம் உன் பார்வையிலும், புன்சிரிப்பிலும் விளங்குவதாக! *அன்னை தெரசா*

✷ அன்பின் உண்மை செயலில் வெளிப்படுகிறது. அன்புள்ள இடத்தில் பெரிய செயல்கள் விளங்கும்.
*திருத்தந்தை பெரிய கிரகோரியார்.*

✷ அன்பிற்கு வடிவம் என்ன? அதற்கு பிறருக்கு உதவி செய்யக் கைகள் உண்டு. தேவையுள்ளவரிடம் விரைந்து செல்லக் கால்கள் உண்டு. பிறர் சோகங்களைக் காணும் கண்கள் உண்டு. பிறரின் பெருமூச்சுக்களைக் கேட்க காதுகள் உண்டு. இதுவே அன்பின் உருவம்.
*ஹிப்போ அகுஸ்தினார்*


## மணமகன் தேவை



சிலாபம் மறைமாவட்டம் கல்விப் புலத்தைச் சேர்ந்த பெற்றோர் நீதியான காரணத்துக்காக விவாகரத்துப் பெற்று, திருச்சபை அனுமதியையும் பெற்றுள்ள பயிற்றப்பட்ட கத்தோலிக்க ஆசிரியையான 29 வயது மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். வீடு, வளவு சொந்தமாய் உண்டு. இறைபக்தி, நற்பழக்கங்கள் உடைய ஆசிரியர்கள், அரச உத்தியோகஸ்தர்கள் பொருத்தமான சுய தொழில் செய்பவர்கள்

தொடர்பு கொள்ளவும்
தொலைபேசி
077 5744096

**கத்தோலிக்க அச்சகம்**
**கொழும்பு - 08.**
(N 3104)

பலாங்கொடை, கத்தோலிக்க பெற்றோர் தமது 24 வயதுடைய சிவந்த, கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் தமது ஒரே புதல்விக்கு நல்ல வரனை எதிர்பார்க்கின்றார்கள். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
077 4077487
Email: ivormalfred@yahoo.com

**கத்தோலிக்க அச்சகம்**
**கொழும்பு - 08.**
(N 3283)

## மணமகன் தேவை



பிரான்ஸ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பிரெஞ்சு பிராஜாவுரிமையுடைய 28 வயதான மணமகனுக்கு றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். யாழ்பாணத்தைச் பூர்வீகமாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
077 5143941
(வார நாட்களில் பிற்பகல் 4.00 மணிக்கு பின்னரும் சனி, ஞாயிறு நாட்களில் காலை 10.00 மணிக்குப் பின்னரும் தொடர்பு கொள்ளவும்)

**கத்தோலிக்க அச்சகம்**
**கொழும்பு - 08.**
(N 3340)

## FOR ALL FURNITURE REQUIREMENTS OF THE CHURHES

✷ Altars, Reading stands, fences, benches, chairs and other with smooth carvings and traditional designs.
✷ Refurbishing of old furniture.
✷ House furniture and stair cases.

**Contact**
Renowned furniture
Suppliers for generation
**Maduwantha Wood Craft**
21 Edward Lane
Indibedda, Moratuwa

Tel : 0722919553
(N3341)